# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஆனி 31உ (15—7—73) ஞாயிறு ஐ: ஆசிரி 14—புத்தகம் 26 இதழ் 31


## தமிழர் பிரச்சினையை மறந்த இடதுசாரிகள்!

''1955ம் ஆண்டுக்குப்பின் கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாசக்கட்சியும், தேசிய சிறுபான்மை இனத்தவரைப் பற்றிய பிரச்சினையிலும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர் பற்றிய பிரச்சினையிலும் தமது உறுதியான புரட்சிகர நிலைப்பாட்டை மறந்து விட்டன.''

— நா. சண்முகதாசன்
(தினகரன் 8-7-73)

அரசின் சர்வாதிகாரச் சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட தமிழருக்கு

# வடக்கு, கிழக்கில் மீண்டும் மறுவாழ்வு!

## தமிழர்கூட்டணி அவசர ஆலோசனை!

புனைப்பகுதியில் அரசாங்கக் காணிகளில் குடியேறி விவசாயத்திலீடுபட்டிருந்த நூற்றுக் கணக்கான மலையகத் தமிழர்கள், சிங்கள அரசாங்கத்தின் சர்வாதிகார சட்டத்தின்கீழ் அங்கிருந்து துரத்தப்பட்டு வருகிருர்கள் அல்லவா? இப்படி துரத்தப்படும் மலையகத் தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீண்டும் மறுவாழ்வு அளிக்கக்கூடிய திட்டமொன்றை தமிழர் கூட்டணி இப்பொழுது உருவாக்கி வருவதாக தெரியவருகிறது.

தமிழர் கூட்டணிஉயர்மட்டத் தலைவர்களின் ஆலோசனையிலிருக்கும் இத்திட்டம், இத்திங்கள் 22ம் நாள் யாழ்ப்பாணத்தில் கூடும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிகிறது.

மலையகத் தோட்டங்களில் வேலை செய்துவந்த நூற்றுக் கணக்கான தமிழ்த்தொழிலாளர்கள் வேலையிழந்து வாழவழியின்றி, மலையகத்தைவிட்டு வெளியேறி ஈழத் தமிழினத்தின் பாரம்பரியப் பிரதேசமாகிய கிழக்கு மாகாணத்திலுள்ள புனைப் பகுதியில் குடியேறி வவசாயத்திலீடுபட்டிருந்ததும் அப்படி உணவுற்பத்தியிலீடுபட்டிருந்த இத்தொழிலாளர்களை அவசரகாலச் சட்ட விதிகளின்கீழ் அவர்கள் குடியேறிய நிலத்திலிருந்து அரசாங்கம் சர்வாதிகாரத்தனமாக துரத்தி வருவதும் தெரிந்ததே.

(7-ம் பக்கம் பார்க்க)

## ஆட்சியாளரின் இரட்டை முகம்

''வகுப்புவாதப் பிரச்சினைகளுக்கு இனி இந்நாட்டில் இடமேயில்லை''

— வடக்கில் சுகாதார அமைச்சர் ஆரியநாச பேச்சு;

''போர்த்துக்கியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரினுல் சுரண்டப்பட்டுவந்த எமது சிங்கள மக்கள் 1972ம் ஆண்டு மே 22ந் திகதிக்கு பின்னரே உண்மையான சுதந்திரத்தை பெற்றனர். அந்நியரின் சுரண்டலின்பின் தொண்டமானும் அண்ணுமலையும் எம்மை ஆட்டிவைக்கப் பார்க்கிருர்கள். அவர்களின் ஆட்டத்திற்கு நாம் ஆடப்போவதில்லை.''

— தெற்கே காணியமைச்சர் கொப்பேகடுவ பேசியது:

## 'சண்'ணும் சாடுகிருர்!

'தமிழ் பிரதேசங்களில் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் குடியேறும் போது அதைத் தடுத்து நிறுத்துவதற்கென விசேட சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டிய அவசியம் என்ன? பல்லகெல தோட்டத்தில், தென், வட மத்திய மாகாணங்களில் எல்லாம் குடியேற்றம் நடக்கவில்லையா? அங்குள்ள விதிகளை தமிழ் பிரதேசங்களுக்கும் ஏன் பிரயோகிக்க முடியாது? ஏன் விசேட சட்டம் பிரகடனப் படுத்தப்படவேண்டும்?

—நா. சண்முகதாசன்
(இரத்தினபுரியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி கூட்டத்தில் பேசியது)

## ஆளுங்கட்சிக்கு அடிக்குமேல் அடி!

அவசர காலச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி மக்கள் மீது சர்வாதிகார ஆட்சி நடத்திவரும் ஆளுங்கட்சிக்கு கடந்தவாரம் அடிக்குமேல் அடிவிழுந்துள்ளது.

டெடிகமைத்தொகுதி இடைத்தேர்தலில் சிங்கள மக்கள் ஆளுங்கட்சியை நிராகரித்துள்ளனர். 1970 பொதுத்தேர்தலில் எடுத்த பெரும்பான்மையை விட 3441 வாக்குகள் அதிகப்படி பெரும்பான்மை வாக்குகள் பெற்று எதிர்க்கட்சியான யூ. என். பி. டெடிகமை தொகுதியை மீண்டும் கைப்பற்றியது. அதே வேளையில் ஆளுங்கட்சியினரால் முந்தியதைவிட 352 மேலதிக வாக்குகளையே கைப்பற்ற முடிந்திருக்கிறது. இது முதலாவது அடி.

இரண்டாவது அடி, தேசிய அரசப்பேரவையில்

(7-ம் பக்கம் பார்க்க)

## மகேந்திரன் நீர்கொழும்பு சிறையில்!

'மே 22' நூலை வெளியிட்டதற்காக அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் சென்ற 4-6-73ல் கைது செய்யப்பட்ட திரு. வி. மகேந்திரன் இப்பொழுது நீர்கொழும்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிருர்.

## "வன்முறைகளுக்கு மத்தியிலும் டெடிகமையில் இடைத் தேர்தல்!

## அமைதி தவழும் காங்கேசன்துறையில் தேர்தல் நடத்துவதில் தாமதம் ஏன்?"

வன்முறை, காடைத்தனம், அராஜகம் இவற்றின் மத்தியிலும் டெடிகமை இடைத் தேர்தலை நடத்தி முடிந்த அரசாங்கம் அமைதி தவழும் காங்கேசன் துறைத் தொகுதியின் மட்டும் 'வன்முறை' என்று பொருந்தாக் காரணம் கூறி இடைத் தேர்தலை கால வரையறையின்றி ஒத்திவைப்பது ஏன்? இப்படிச் செய்வதன் மூலம் தமிழ் மக்களை இந்த அரசாங்கம் வேண்டுமென்று அவமதிக்கிறது என்றே கூறவேண்டும்—

இவ்வாறு தமிழர் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினுர். அவர் மேலும் கூறியதாவது:

காங்கேசன்துறை இடைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் கடந்த எட்டு மாதங்களாக பொருந்தாக் காரணங்களைக் கூறி அரசு இழுத்தடித்துக் கொண்டே வருகிறது. இப்படி செய்வதன் மூலம் ஜனநாயகம் என்ற தாயின் கழுத்தை அரசு நெரித்துவருவது மட்டுமல்ல—தமிழ் மக்களை—35 இலட்சம் தமிழ் பேசும் சமுதாயத்தை—இந்த அரசாங்கம் உதாசீனம் செய்து அவமதித்தும் வருகிறது.

அமைதி தவழும் காங்கேசன்துறையில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுவதாக பொய்க்காரணத்தைச் சொல்லி, அரசாங்கம் இடைத்தேர்தலை நடத்தாமலேயே வருகிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

## சாதிக்கலவரத்தை மூட்ட தினபதி திட்டமிடுகிறதா?

### சுன்னுகம் பட்டினசபை கண்டனம்! நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை!!

27-6-73ல் நடைபெற்ற சுன்னுகம் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் உப-தலைவர் திரு. இராசதுரை பின்வரும் தீர்மானத்தை முன்மொழிய, 5ம் வட்டார உறுப்பினர் திரு. மா. நடராசா வழிமொழிய சபையினுல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

'சென்ற சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு வழமை பிரகாரம் வருடாவருடம் சுன்னுகம் பட்டினசபையால் நடாத்தப்படும் விளையாட்டுப்போட்டி. இம்முறையும் சுன்னுகம் பட்டன மக்களின் பரிபூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று சென்ற வருடங்களிலும் பார்க்க இம்முறை பாராட்டப்படக்கூடிய முறையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

மக்கள் எல்லோரும் உயர்வு தாழ்வு அற்ற முறையில் சாதி வித்தியாசம் இன்றி விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்றி பரிசில்களையும் பெற்ருர்கள்.

தினபதிப் பத்திரிகை கடந்த 26-6-73 இதழில் சுன்னுகம் பட்டினசபையால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிக்கு உடுவில் தேசிய பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் சாதி வித்தியாசம் பார்த்து சிறுபான்மை தமிழர்களால் நடாத்தப்பட்ட விளையாட்டரங்கில் பங்கு பற்றவில்லை என்றும் உண்மைக்கு மாறுன பச்சைப்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஆட்சி கண்டு நடுங்கும் சிங்கேறு நம் அமிர்தலிங்கன்!

## ஈழத் தமிழினத்தின் காவலன் அவனே!

## அமிர் தலைமையில் தமிழினம் திரளட்டும்! அன்னைத் தமிழின் விலங்கொடியட்டும்!

கூட்டத்தில் கூடி நின்று கூடிப் பிதற்றும் தலைவன் அல்ல இன்றைய நம் தலைவன் அமிர்தலிங்கன். வெங்கொடுமைச் சாக்காட்டில் ஈழத் தமிழ் இன விடுதலைக்காக விளையாடி வெற்றி காண இருக்கும் தோள்கள் அவன் தோள்கள். கங்கையைப்போல் காவிரிபோல் ஜனநாயகக் கருத்துக்கள் ஊறும் உள்ளம் அவனின் உள்ளம். ஈழத் தமிழர் கூட்டம் வெள்ளம் போல் ஒன்று கூடி வீரங்கொள் கூட்டமாகி அன்னார் உடலினால் பலராயிருப்பினும் உள்ளத்தால் ஒருவராக அவர்களைக் காண விருப்புபவன் நம் அரும் தலைவன் அமிர்.

### சாதிக்கு சவுக்கடி

சாதியின் பெயரால் சமயத்தின் பெயரால் தமிழர்களை கூறுபோட்டு சின்னாபின்னப் படுத்துபவர்களுக்கு சவுக்கடி எத்தனை எத்தனை கொடுத்தான் என்பது சொல்லும் தரம் அன்று! இன்றும் சாதி சமய வெறியர்கள் அமிர்தலிங்கம் என்ற பெயரைக் கேட்டாலே, நடு நடுங்கித் தலைதெறிக்க ஓடி மறைவர்.

### ஆட்சியினர் நடுக்கம்

ஏன் சில மாதங்களுக்கு முன் தமிழ் பகுதியில் செல்வாக்குத் தமக்கும் உண்டு என்று படை பட்டாளங்கள் புடை சூழ யாழ்ப்பாணம் வந்து, மூக்குடைப்பட்டு தம் முகத்தில் தம் கையாலே கரிபூசிக் கொண்டு, அவமானம் தாங்க முடியாது பிச்சைவேண்டாம் நாயைப் பிடி என்று தமிழர்களின் எதிர்ப்பைக் கண்டு கால் தெறிக்க தென் இலங்கை நோக்கி ஓடியவர்கள், எம் இன்றைய தலைவனும் காவலனுமாகிய அமிர் பற்றி அதிகம் தமக்குள் பேசினார்கள்; கதைத்தார்கள்! அமிர்தலிங்கம்தான் கறுப்புக் கொடிக்கு வித்திட்டவர் என்று!

இதில் இருந்து நம் தலைவனுக்கு ஆட்சியினர் எவ்வளவு தூரம் நடுங்குகின்றார்கள் என்பது புரியும்.

### நீயே தலைவர்

நாவலனே; தமிழ் இனத்தின் காவலனே, இன்று ஈழத் தமிழ் இடமெல்லாம் ஆரவாரம், ஆனந்தம், எங்கும் மகிழ்ச்சி அடிமை விலங்கு ஒடிந்து வீர சுதந்திரம் கிடைத்ததுபோன்ற நினைவு, ஆம் தமிழர்கள் இல்லம் தோறும் சென்ற சில நாட்களாக மக்களை அறியாமலே அவர்களின்போக்கில் மகிழ்ச்சிக்குரிய மாற்றங்கள்வாலிப உள்ளங்கள் வருங்காலத் தமிழகம் இப்படித்தான் அமையும் என்று கற்பனையில் களிக்கின்றனர் — வயோதிபர்கள் நாம் இன்று வாலிப உள்ளங்கள் பெற்று விட்டோம் என்று வீருப்புக் கொள்ளுகின்றனர். ஆம் எல்லாம் நம் தலைவனாக நீ வந்து விட்டாய் என்பதால் அல்லாது வேறுஒன்று மல்ல.

### உன்பெருமை யாருக்குண்டு

நம் அடிமைத்தளை அறுக்க தலைமைப் பதவி ஏற்கவிருக்கும் தமிழர் தலைவனே, உன் தலைமையிலேயே நாம் விடுதலை அடைய, நம்மொழியின் இழி நிலை அகல போராட்டம் நடத்தி சுதந்திரத் தமிழகம் அமைத்திட எமக்கு வழிகாட்டு. பதவி மோகமோ, பண ஆசையோ இல்லாது பாரதி பாடியது போல் இதம் தரும் மனைவி நீங்கி இடர்படு சிறைப்பட்டாய், பதம் திரு இரண்டும் மாறி பழி மிகுந்து இழிவுற்றாய். ஆனால் சுதந்திர தேவியை தொழுதிட நீ மறந்ததே இல்லை. தமிழ் நாடு, தமிழ் இனம் மொழி மூன்றையும் உடல் பொருள் ஆவியாகக் கொண்டவனே, வஞ்சகரின் சூழ்ச்சியை பொடிப் பொடியாக்கி தமிழ் இனம் படுகுழியில் விழாது தடுத்த தளபதியே! வாலிப உள்ளங்களிலும்; வயோதிப உள்ளங்களிலும் வீரத்தையும் அஞ்சாமையையும் சொல்வன்மையாலும் செயல்திறத்தாலும் ஊட்டி உரம் கொடுத்தவனே.

**தி. வ. துரைரத்தினம்**
(மன்னார்)

இனவெறிபிடித்த தமிழ் இனத்தின் இரத்தத்தை உறிஞ்சும், சிங்கள ஆட்சியின் காவல் படையினரால் உண்மைக்கும் நேர்மைக்கும் இன விடுதலைக்கும் போரடிய வேளையில், பல இன்னலும் இக்கட்டும் பட்டு சித்திர வதையுண்டு சிறைப்பட்ட வீரனே.

மலையே வந்தாலும் தலையே, இன விடுதலைக்காக வேண்டி அதை சும என்று கூறினையேயன்றி—உன் குறிக்கோளையும் கொள்கையையும் கைவிட்டாய் இல்லை. காவலா, நம் இனிய நாவலா, உன் திருவுருவம் தமிழ் மக்களின் கண்களில் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. உன் வீரமுழக்கம் நம் செவிகளில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது. உன்னால்தான் நாம் எல்லாம் இனவிடுதலை வேட்கை கொண்டது. உன்னை நினைத்தாலே குருடனும் விழிபெறுகின்றான். முடவன் வீறு நடை போடுகின்றான். கோழையும் வீரனாகின்றான்.

இந்திய விடுதலைப்போலில் கப்பல் ஓட்டிய தமிழ வீரன் சிதம்பரப் பிள்ளையை போன்று ஈழத் தமிழகத்தில் ஒரு வீரன் உண்டென்டால் அது நீ தான் வேறுயாருமல்ல.

### ஜனநாயகத்தின் காவலன்

அரசியலில் புகுந்தால் பட்டம் பதவி, பணம் இவை எல்லாம் பெறலாம் என்று அரசியலை வைத்து வியாபாரம் செய்யும் தறுதலைகள் பலர் இருக்கும் ஈழத் திருநாட்டில் நீயே உண்மை ஜனநாயக உணர்வோடு பணைத்தால் பல இன்னல்கள் வந்து கூடுமே என்று பாராது உண்மைக்குப் புறம்பாக, நேர்மைக்கு மாறாக எவர் நடந்தாலும் எத்தகைய பெரும் தலைவன்தான் நடந்தாலும் அஞ்சாது வீரமுடன் பிழையை, பிழை என்று எடுத்துக்காட்டுபவன் நீ. உன்னை அண்ணா என்றும் நாவலன் என்றும், தளபதி என்றும் பலரால் பலமுறை [illegible] தமிழ் இனத்தின் 'காவலன்' அமிர் என்பதே உனக்குப் பொருத்தமானது.

நீ இன்று ஆட்சி மன்றத்தில் இருந்திருந்தால் தமிழ் மக்களை தம் நடவஞ்சகத்தால் ஏமாற்றி கால்தடவி இலை நக்கி உயிர் வாழும் சில தமிழ் பா. உ.க்களின் கதி அதோகதியாகத்தான் இருந்திருக்கும். இது மாத்திரமல்ல சிங்கள அமைச்சர்களின் வெறிபிடித்த பேச்சுக்கெல்லாம் சவுக்கடி கொடுத்து தலை குனிய வைத்திருப்பாய்.

தலைவனே! எம்காவலனே உன் தலைமை நிச்சயம் தமிழ் இனம் சுதந்திர இனமாக யாருக்கும் அடிமைப்படாத இனமாக வாழ வைக்கும் என்ற திடமான நம்பிக்கை நமக்கெல்லாம் உண்டு. நீ நடத்தவிருக்கும் அறப் போராட்டப்பாதை அடிமை விலங்கை ஒடிக்கும். உன் ஆணைக்கு கட்டுப்பட நாம் எல்லாம் தயாராக உள்ளோம்.

### பொன் எழுத்தால் பொறிக்கப்படும்

நேர்மைக்கும் வீரத்திற்கும் எடுத்துக் காட்டாய் இருக்கும் தலைவனே; தமிழ் இனத்தின் தலைமை பதவி ஏற்ற இன்றைய நிலையில் உன்னை எம்இருகண்களாலும் கண்டு எமது வாழ்த்தையும் ஆசியையும் உனக்குக் கொடுக்கவேண்டும்என்று துடியாய் துடிக்கின்றோம். அத்தோடு, உன் தலைமையில் நடைபெற இருக்கும் அறப்போராட்டத்திற்கு நாம் எல்லாம் சம்மதம் தந்து படையில் உறுப்பினராகசேரவும் நினைத்துள்ளோம்!

எனவே எம் இனிய தலைவனே நீ தமிழர்கள் வாழும் இடமெல்லாம் திக்கு விசயம் செய்யவேண்டும். நீ வட்டுக்கோட்டை தொகுதியில் தோல்வி அடைந்ததை நாம் கேட்டபோது கவலை அடைந்தோம். அன்று நீ வட்டுக்கோட்டை தொகுதியில் வெற்றி பெற்றிருந்தால் வட்டுக் கோட்டைத் தொகுதி மக்களுக்கு மாத்திரம் தலைவனாக இருந்திருப்பாய் தோல்வி அடைந்தமையால்தான் இன்று ஈழத் தமிழ் நாட்டின் தனிப் பெரும் தலைவனாகிவிட்டாய்!

உன் தியாக வரலாறு ஈழத்தமிழ் சரித்திரதில் பொன் எழுந்தால் பொறிக்கப்படவேண்டிய ஒன்று கட்டாயம் பொறிக்கப்பட்டே திரும் என்பது எமது நம்பிக்கை.

---

## தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

இன்று நாம் பேசுவது தமிழா? நம் இதயத்தில் கையை வைத்துக் கேட்டால் இல்லையென்னும் பதிலே நமக்குக் கிடைக்கும். ஏன்? அதுதான் அதிசயமில்லையே. பழமைக்கும் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் மிளிரும் இன்பத்தமிழை; சேர, சோழ, பாண்டியர் சபைகளிலே எழுச்சியுடன் வீரமாய் முழங்கிய தமிழை; தமிழ்தினும் இனிய அன்னைத் தமிழை நாம் அன்றாடம் கொலை செய்து வருகிறோமே. அதுதான் காரணம்.

ஒரு தமிழ் நீதிபதியின் வீட்டில், குழந்தைகள் அம்மா, அப்பா என்று பெற்றோரை அழைக்கின்றனரா. ஆனால், ஒரு சாதாரண தமிழ் எழுத்து வினைஞனின் வீட்டில், மம்மி, டட்டி விளையாட்டு நடக்கிறது.

ஒரு அரசாங்க வைத்திய அதிகாரியின்வீட்டில் மாமா, மாமி என அழகு தமிழ் ஒலிக்கும்பொழுது, ஒரு சாதாரண தமிழாசிரியனின் வீட்டில் அ[illegible] அன்ரி என்னும் ஆங்கிலப் பதங்கள் ஒலிக்கின்றன. இவை போன்ற எத்தனையோ இடங்களில் தமிழ் மக்கள் தெரிந்தும், தெரியாமலும் தமிழைக் கொலை செய்து வருகின்றனர்

உதாரணமாக, ஒரு நண்பனிடம் [illegible] நண்பன், '[illegible] போகிறாய் மச்சான்' [illegible] தமிழில் கேட்டால், '[illegible] கொஸ்பிற்றலுக்குப் போகிறேன்' என்று சொல்கிறான். ஏன்? நான் வைத்தியசாலைக்குப் போகிறேனென்றால் இழுக்குண்டாவதில்லையே!

இப்படியாகப் பலப்பல இடங்களில், இனிய தமிழ்; இமயம்போல் உயர்ந்த தமிழ்; துரித வளர்ச்சிகண்ட தமிழ் கொலைசெய்யப்பட்டு குற்றுயிராக்கப்பட்டால் நாளடைவில் நாமெங்கே தமிழைக் காண்போம்!

விமானம் என்னும் அழகு தமிழ் இருக்க 'பிளேன்' என்கின்றனர், புகையிரதம் என்பதற்கு 'ரெயின்' என்றும், ஈருருளி என்பதற்கு 'சைக்கிள்' என்றும், பத்திரிகை என்பதற்குப் 'பேப்பர்' என்றும், எழுதுகோல் என்பதற்குப் 'பென்' என்றும், பட்டணம் என்பதற்கு 'ரவுண்' என்றும் சொல்லிவந்தோமானால் நம் தமிழ் எங்கே வாழ முடியும்; உயர முடியும்; வளம்பெற முடியும்; உரம்பெறமுடியும்.

எனவே தமிழ் வாழவேண்டும்; தரணியில் அது தலை நிமிர்த்து நடக்கவேண்டும் என்னும் அவாவுடையோர் தமிழையே பேசட்டும்; தம் பிள்ளைகளுக்குத் தமிழையே ஊட்டட்டும்.

தமிழ்; அது இனியது; உயர்ந்தது; சிறந்தது; உலக அறிஞர்களால் பாராட்டப்படுவது. அதை நாம் மட்டும் ஏன் குறைவுபடுத்த வேண்டும். வேண்டாம். தமிழ் வாழவேண்டும், எனவே தமிழே பேசுவோம்.

—கே. கே. பிதாம்பரம்.

---

## மலையக மக்களுக்கு மேலும் ஒரு பேரிடி

இலங்கையில் வாழும் மக்களில் மலையக மக்களே கூடிய வேலை பெற்று, குறைந்த சம்பளம் பெறும் ஒருகீழான நிலையில் வாழுகின்றார்கள். பொருளாதாரத்தில் நிரந்தரமாக பின் தங்கி விட்ட ஒரு பயங்கரமான சூழலிலே இம்மக்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உழலுகின்றனர்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு, முதலிய இடங்களில் வாழுகின்ற மக்களில் 100க்கு 50 சதவிகிதமானோர் கல்வியறிவு பெற்றவர்கள். 25 சதவிகிதமானோர் சர்வகலாசாலையில் படித்தவர்கள். ஆனால் மலையக மக்களோ, அவர்களது பிள்ளைகளோ விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலாவது கல்வியறிவு பெற்றது கிடையாது. குறிப்பாக ஆரம்ப வகுப்பிலிருந்து தோட்டப்பாடசாலையில் ஓரளவு கல்வி அறிவு பெறும் மலையக சந்ததியினர் எப்படி படித்து முன்னேற முடியும்...?

அதிலும் ஒருசில தோட்ட நிர்வாகங்கள் கரும்பலகை, புத்தகங்கள், கரும்பலகையில் எழுதக் கூடிய உபகரணம், போன்றவைகளைப் பெற்று ஆசிரியர்கள் மூலம் விநியோகிக்கின்றனர். அதில் ஒரு சில தோட்ட ஆசிரியர்கள் பாடப்புத்தகங்களை, கரும்பலகைகளை, 'கள்ளச் சந்தை எனப்படும் தகாத வகையில் புத்தகக் கடைகளுக்கு விற்று விடுகின்றனர். இதன் காரணமாக, இதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஏழை மலையக இளம் சமூகம் மென்மேலும் அதன் பாதாளத்திற்குள் போய் விழவேண்டிய சந்தர்ப்ப சூழ் நிலைகள் தானாகவே உருவாகின்றன.

குறிப்பாக யாழ். நகர் பருத்தித்துறையைச்சேர்ந்த நெல்லியடி புத்தகக் கடை ஒன்றில் இது மாதிரியான புத்தகங்களை விற்றதாக 'பத்திரிகை செய்தி' ஒன்றின் மூலம் அறிந்து மிக மிக வேதனையடைந்தோம். இதே போல் பண்டாரவளை வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு தோட்டப்பாடசாலை ஆசிரியர் 'புத்தகங்கள்' கரும்பலகைகள்,' போன்றவைகளை 'லாரி' ஒன்றின் மூலம் மறைத்துக்கொண்டு செல்ல முயலும் போது பண்டாரவளை பொலிசாரினால் தகுந்த சமயத்தில் அம் முயற்சி முறியடிக்கப்பட்டது. இதனால் தமிழ் சமுதாயம்... மலையகமாக இருந்தால் என்ன... வடமாகாணமாக இருந்தால் என்ன...... அங்கெல்லாம் வாழுகின்ற மக்கள்... தமிழை வளர்க்கவேண்டிய மக்கள்... தமிழை முழுமையாக கற்றவேண்டிய மக்கள் மிக, மிக 'பின்தங்கிய' ஒரு

## மலையகத்திலே........

அவர்கள் அங்கிருந் துயஉர் கல்வி பெற அரசாங்கப் பள்ளியின் நுழைவாயிலைக் கூட எட்டிப்பார்க்க வழி, வசதிகளின்றி மிகவும் துன்பமான ஒரு சூழ்நிலைக்கு ஆளாகி விடுகின்றனர். இவர்கள் இப்படியான 'பின் தங்கிய சூழ் நிலை' என வர்ணிக்கப்படும் நிலைக்கு ஆளாக வேண்டிய காரணங்கள் :- பொருளாதாரமின்மை, சரியான— சுற்றுப்புறம் அமையாமை, தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடி, குறையாக —பள்ளிக்கு அணிந்து செல்லக் கூடிய உடைகளை சரிவர பெற முடியாமை, புத்தகங்களை குறைவின்றிப் பெற முடியாமை, தொழிற் சங்கங்களின் — அக்கறையின்மை, போன்றவைகள் ஆகும். இப்படிப்பட்ட பரவலான, முன்னேற்றத்தைத் தடை செய்யக்கூடிய பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்த

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உரிமையற்ற அடிமையாக வாழ்ந்து கொண்டு 'எசமானர்களுக்கு' உழைத்துக் கொடுப்பதா தமிழ்பேசும் மக்களின் வேலை?

அண்மையில் சுண்ணுகத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் பேசிய திரு. வ. பொன்னம்பலம், மக்கள் அரசுதான் தமிழ் விவசாயிகளின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்திருக்கிறது எனத் திருவாய் மலர்ந்திருக்கிருர்.

தமிழ் பேசும் விவசாயிகள் மிளகாய், வெங்காயம் உருளைக்கிழங்கு, ஆகியவற்றை உற்பத்தி செய்வதன் மூலம் மிகப் பெருவாரியான தொகைப் பணத்தைப் பெறுகிருர்கள் என்றும் குறிப்பிட்டார். வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி பொருட்களை நாம் முற்றுகத் தடை செய்த படியால் தான் தமிழர்கள் இப்படிப் பணம் சம்பாதிக்க முடிந்தது —எனவே மக்கள் அரசைத் தமிழர் பரிபூரணமாக ஆதரிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

### உலகில் இன்று உணவுப் பொருட்கள் நிலை

உலகிலே வாழுகின்ற சகல மக்களுக்கும் உணவு தேவை என்பதை நாம் மறந்துவிடலாகாது. விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் சந்திரனுக்கு மனிதன் போய்வந்த போதிலும் பசியைத் திர்ப்பதற்கு உணவைத் தவிர வேறு வழி கண்டு பிடிக்கப்படவில்லை.

இயந்திரங்களையும், யுத்தக் கப்பல்களையும், பீரங்கிகளையும், துவக்குகளையும் தோட்டாக்களையும், ஆடம்பரப் பொருட்களையும் உற்பத்தி செய்வதைப் போல ஆலைகளில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே எங்கு சென்ருலும் உணவுக்கு மனிதன் வயலையும் தோட்டத்தையும் நாடிச் செல்ல வேண்டி ஏற்படுகிறது.

### உலக அரசியலும் பொருளாதாரமும்

இன்று தங்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் எந்த ஒரு நாடாவது உற்பத்தி செய்து தன்னிறைவு பெற்றது இல்லை. உலக நாடுகளின் வெட்பதட்ப சுவாத்திய நிலையால் சில பொருட்களைத் தயாரிக்க முடிவதில்லை. அதைப்போல விரும்பிய அல்லது தேவையான உணவுப் பொருட்களைப் பயிரிட முடியாதிருக்கின்றது. எத்துணை வேற்றுமைகள், யுத்தங்கள், பகைமைகள் ஏற்பட்ட போதிலும் வியாபாரத்துக்காக அல்லது நாட்டு மக்களின் தேவைக்காக மிகப் பெருவாரியான அரசியல் எதிர்ப் போக்குகளைக் கொண்ட நாடுகள் கூடத் தம்முள் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்வதை இன்று நாம் காணக்கூடியதாக இருக்கிறது. சமதர்மக் கொள்கைகளைக் கொண்ட ரஷ்சிய நாடு அமெரிக்காவிலே கோதுமையைக் கொள்வனவு செய்து வருகிறது.

### நாணயமதிப்பிறக்கமும் விலைவாசியும்.

ஒரு பொருள், — குறிப்பாக 'சீமென்ற்' என வைத்துக்கொள்வோம் — இன்று உலகம் பூராவிலும் வளர்ந்து வரும் நாடுகளிலும், வல்லரசுகளிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. அதே நேரத்தில் சீமெந்தின் உற்பத்திச் செலவு சகல நாடுகளிலும் ஒரேயளவாக இருப்பதில்லை. அத்துடன் சீமெந்தின் தரமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இப்படி உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மட்டுமல்ல விளைவிக்கப்படும் விளைபொருள்களும் இதே நிலையில்தான் இருக்கின்றது.

வெட்பதட்ட சுவாத்தியம் மட்டுமல்ல, நிலம், நீர், பயிர்ப்பாதுகாப்பும் விளைச்சலில் பெரும் மாறுதலை ஏற்படுத்துகின்றது. உலகச் சந்தையின் விலை வாசிக்கு ஏற்பவே எமது உற்பத்திப் பொருட்களை நாம் பிற நாடுகளுக்கு விற்க வேண்டும். அப்படியான நிலையிலும்கூட எமது பொருட்கள் விற்பனையாவது மந்தமானுல், அல்லது வேறு ஒரு நாடு விலையைக் குறைத்தால் நாமும்

## விவசாயிகளுக்கு அரசு உதவி செய்வதாக கூறப்படுவது வீண் கண் துடைப்பு!

எமது நாணயத்தின் பெறுமதியைக் குறைத்து ஆக வேண்டும். இதனுல் நாம் வேறு நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு பணத்தை (அந்நியச் செலவாணியை) சம்பாதிக்க முடியும்.

ஆனுல் அதே நேரத்தில் உள்ளூர் விலைவாசிகள் அதிகரித்துவிடுகிறது. அண்மையில் இந்தியா நாணயத்தை மதிப்பிறக்கம் செய்தபோது எமது அரசும் இலங்கை நாணயத்தை மதிப்பிறக்கம் செய்ததை நாம் மறந்து விடலாகாது.

### இலங்கையில் அந்நியச் செலவாணியும், வெளிநாடுகளின் கடன் வசதிகளும்

இலங்கையில் 1956 வரை வெளிநாட்டுக் கடன்களும், அந்நியச் செலாவணியும் தாராளமாக இருந்தன. வெளிநாடுகளிலிருந்து பொருட்கள் தாராளமாக தங்குதடையின்றி இறக்குமதி செய்யப்பட்டன. மக்கள் உணவுப் பொருட்களை மட்டுமல்ல ஆடம்பரப் பொருட்களையும் தாராளமாக அந்நியப் பொருட்களாகவே பாவித்து வந்தனர். ஏற்றுமதிப் பொருட்களைவிட இறக்குமதிப் பொருட்கள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டதாலும், வெளிதேசங்களின் எமது கடன் தொகை கூடுதலானதாலும் அந்நியச் செலாவணி கரையத் தொடங்கியது.

### ஆடம்பரப் பொருட்கள் தடைசெய்யப்படல்

அத்தியாவசியமான உணவுப் பொருட்கள், மருந்துகள், எரிபொருட்கள், இயந்திரங்கள் ஆகியவற்றைத் தவிர்த்து ஆடம்பரப் பொருட்களுக்கு தடைவிதிக்கப்பட்டது. இதன்மூலம் அந்நியச் செலாவணி மிகுதியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. வேகமாக வளர்ந்து வரும் சனப்பெருக்கத்தினுலும், தேவைகளை மக்களே அதிகமாக்கிக்கொண்டதாலும் இதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட அந்நியச் செலாவணி கிடைக்கவில்லை. எதிர்

**முத்து-சுப்பிரமணியம்**

மாருக மோசமான அளவுக்கு அந்நியச் செலாவணி குறையத் தொடங்கியது.

### மொழிப் பிரச்சினையும் இனக் கலவரமும்

நாட்டில் சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பங்களாலும், இனக்கலவரங்களினுலும் உள்ளூர் உற்பத்தி பாதிக்கப்பட்டது மட்டுமல்ல வெளிநாட்டுப் பொருட்களில் உணவு, எரிபொருள், படைக்கலங்கள் ஆதியன கூடுதல் தேவை ஏற்பட்டதால் அந்நியச் செலாவணியில் தொடர்ந்து மேலும் நெருக்கடி ஏற்பட்டது.

மொழி சோறு போடாது — மொழிப் பிரச்சினையை வளர்த்துக் கொண்டு தமிழரசுக் கட்சி பாராளுமன்றத்தில் இடம் பிடிக்கிறது என்று இப்பொழுதும் கூறுகின்ற இடதுசாரிகள் மொழி சோறு போடாது என சிங்கள மக்களுக்கு சொல்வதற்கு முன்வருவார்களா? சிங்களம்மட்டும்சட்டத்தினுல் தமிழ் மக்களின் மொழி மறுக்கப்பட்டதால் தமிழ் மக்கள் அரசியல் நடவடிக்கையில் இறங்கியதால் நாட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல அந்நியச் செலாவணியும் கரைகின்றது. என்பதை இன்றுவது உணருகின்ருர்களா?

### உலகச் சந்தையில் உணவுப் பொருட்களின் விலை

மிக வேகமாக வளர்ந்து வரும் சனப்பெருக்கத்தாலும் கால நிலை பாதிப்பாலும், உலகில் விவசாயப் பொருட்களின் விலை மிக உயர்ந்து வருகிறது. தவிரவும் இலங்கையில் பீக்ஸ் கட்டணம் சில பொருட்களுக்கு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து உணவுப் பொருட்களின் விலை இரட்டிப்பு அல்லது மும்மடங்காக உயர்ந்தது. அந்த [illegible] உணவுப்பொருட்களையும் இறக்குமதி செய்ய எம்மிடம் போதிய அந்நியச் செலாவணி இருக்கவில்லை.

### உணவுப்பொருட்கள் தடையும் உள்ளூர் ஊக்குவிப்பும்

வேறு வழியின்றி எம்மால் பயிரிடக்கூடிய சில பொருட்களையாவது நாம் இங்கேயே செய்து அதை தன்னிறைவு பெற முயற்சிக்கப்பட்டது. ஆனுலும் சில காலங்களில் வெங்காயம், மிளகாய், இறக்குமதிசெய்யப்பட்டது. இறுதியாக இறக்குமதி அறவே நிறுத்தப்பட்டது. உள்ளூர் உற்பத்தி போதாமையால் இப்போது இறக்குமதி நிறுத்தப்பட்டபொருட்களின் விலை கூடுதலாக இருக்கின்றது.

இது மட்டுமல்ல சந்திரனிலிருந்தாவது அரிசிகொண்டு வந்து தருவோம் என வாக்குறுதி அளித்தவர்கள் அரிசியை வாங்க அந்நியச் செலாவணியை எதிர்பார்க்கின்ருர்கள். அரிசியையும் இறக்குமதி செய்யமாட்டோமென அமைச்சர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள் கூறுகின்ருர்கள்.

### இறக்குமதித் தடையால் தமிழர் வருமானம் கூடியதா?

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இறக்குமதித் தடையால் மிகப்பெருவாரியான பணம் விவசாயத்தின் மூலம் தமிழ்பேசும் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது என அமைச்சர்கள் அரசாங்க அதிகாரிகள், ஐக்கிய முன்னணிப் பிரமுகர்கள் கூறுகிருர்கள். ஆனுல் உண்மை என்ன?

ஒரு ருத்தல் மிளகாய் 3/50க்கும் ஒரு இருத்தல் வெங்காயம் =/28 சதத்துக்கும் நாம் அரசினருக்குக் கொடுத்த போது கிடைத்த

## பொன்னம்பலமும் தமிழர் பொருளாதாரமும்

ஆதாயம் இன்று கிடைக்கிறதா? இல்லவே இல்லை.

### விவசாயத்துக்கு அத்தியாவசியமான பொருட்களின் விலை

சுமார் 1400/= ரூபாய்க்கு வாங்கிய தண்ணீர் இறைக்கும் பம்பு தற்போது விவசாயியால் வாங்க முடியவில்லை. 2800/= ரூபாய்க்கு விற்கப்படும் இப் பம்பை வாங்க பேர்மிட் எடுத்து கடையில் அல்லது சங்கத்தில் முற்பணமும் கட்டிக்காத்துக் கிடக்கிருேம்.

எல்லோரும் விரும்பும் வூல்ஸ்சிபி பம் தற்போது பழையது 6000/= ரூபாவுக்குப் போய்விட்டது. தண்ணீர் இறைப்பதற்கும் பம் இல்லாமல் கமக்காரன் எத்தனை அல்லல் படுகிருன்; மிகப்பழைய தண்ணீர் பம்களுக்கு உப உறுப்புகள் இல்லாமல் தோட்டத்தைப் பாதியில் கைவிட்டு விட்டு விவசாயி நாயாக மெக்கானிக்குகளிடம் அலைகிருன். மெக்கானிக் கடைச்சல் பட்டறைகளுக்கு அலைகிருன். போக வர ஒழுங்காக பஸ் சாவது ஓடுகிறதா? அது வேறு கதை.

### கிருமி நாசினிகள் விலை

மிக மிகத் தேவையான கமத் தொழில் இலாகாவின் சிபார்சு பெற்ற 'அசோட்றின்' தட்டுப்பாடாக இருக்கிறது. வெளிச்சந்தையில் 45/= ரூபாவாகி விட்டது. மருந்தடிக்கும் ஸ்பிறேயர் கையால் இயங்குவது ரூபா 500/-ஐப் பிடித்து விட்டது. இயந்திரத் தெளி கருவி 2000/-த்துக்கும் மேலாகி விட்டது. ரூபா 3/50 விலையில் செத்தல் மிளகாய் இருந்த போது '895/ ரூபாய் மட்டுமே இயந்திரத் தெளிகருவி விலை' கூலியாட்களின் கூலிகள் தற்போது ஆண்களுக்கு 8/-ம் பெண்களுக்கு 5/-மாகி விட்டது.

### வாழ்க்கைச் செலவு

எதுவும் சாதாரண மனிதனுல் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து விட்டது. ஒரு சேட் ஒரு வேஸ்டி ஒரு பெனியன் வாங்க ரூபா 90/- தேவை. குடும்பத்துக்கு உடுப்பானுல் 250/- ரூபா தேவைப்படுகிறதே? அன்றுட செலவென்ன?

### மிளகாய்ச் செடிகள் நோய்

புதிய புதிய நோய்கள். அவை ஆராய்ச்சிக்கு அகப்படுவதாகத் தெரியவில்லை. விசுவமடு போன்ற விவசாயப் பிரதேசமே நோயால் தாக்கப்படுகிறது; விவசாய ஆராய்ச்சியாளர்கள் நோயைக் கண்டு பிடிக்க முன்பு மிளகாய்ச் செய்கையே அழிந்து விடும் போலிருக்கிறது.

இத்துணை கஷ்டமும் பட்டுத்தான் செத்தல் மிளகாயைச் சிகப்பாக சிறப்பாகச் செய்ய முடிகிறது.

அரசினர் ஊக்கம் தருகிருர்களா?

விவசாயிக்குத் தேவையான மருந்து வகைகள் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பசளை, இயந்திர உப உறுப்புக்கள் நீர் இவற்றை அரசு தாரளமாக விநியோகித்து, நோய் சம்மந்தமான ஆராச்சிகளையும் உடனுக்குடன் செய்து தருமானுல் அரசின் உதவிதான் என்று பெருமிதத்துடன் கூறலாம.

### மிளகாய் விலை

விலையை அரசு நிர்ணயம் செய்யாமல் கொழும்பு வர்த்தகர்கள் கொழுப்பதற்காக தடைகள் அகற்றப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழர் கூட்டணி பா. உ. க்கள் என்ன செய்கிறார்கள்?

தமிழர் கூட்டணி பா. உ. க்கள் எங்கே? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்கின்ற கேள்விகள் கடந்த சில காலமாக தமிழ்மக்களின் உள்ளங்களில் விசுவரூபமாக எழுந்துள்ளன:

தேசிய அரசுப் பேரவையில் தமிழர் கூட்டணியின் குறிப்பிடத்தக்க ஒருசில பா. உ. க்களின் குரலே அடிக்கடி எழுகிறது—எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் இந்த ஒரு சிலரே தேசிய பேரவையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்—ஏனையோர் எங்கே? என்ன செய்கிறார்கள்?

தமிழ் மக்களின் உள்ளங்களில் எழுந்துள்ள இக்கேள்வி முற்றிலும் நியாயமான கேள்வி என்றே நாம் கருதுகிறோம்:

தமிழினம் அரசியல் உரிமைகளை இழந்து — அடிமையாக்கப்பட்டு, விடுதலைக்குப் போராட உறுதியெடுத்துக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் கட்சி பேதங்களைக் களைந்தெறிந்து ஒரே அணியில் — தமிழர் கூட்டணியில் இணைந்து நிற்கிறார்கள்.

நாள் தோறும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளையெல்லாம் தேசிய பேரவையில் ஓங்காரக் குரலெடுத்து ஊருக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டவும் ஆட்சியாளருக்கு இடித்துரைக்கவும் விடுதலைக் கோரிக்கையை முன்வைக்கவும் வேண்டிய பாரிய பொறுப்பு தமிழர் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சார்ந்ததாகும்.

ஆனால் இந்தப் பொறுப்பினை கூட்டணி பா. உ. க்கள் அனைவருமே சரிவரச் செய்கிறார்களா என்று கேட்டால், அப்படி செய்பவர்களை விரல் மடித்துக் கூறிவிடலாம்! மிகப்பலர் ஏனோதானோ என்று இருக்கிறார்களே—விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் அற்று இருக்கிறார்களே—ஏன் இப்படி இருக்கிறார்கள் என்பதே தமிழ் மக்களுடன் சேர்ந்து நாமும் இவர்களைப்பார்த்து கேட்கின்ற கேள்வியாகும்.

தமிழர் கூட்டணி ஒரு சாதாரண அமைப்பல்ல—தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கும் ஒரு விடுதலை இயக்கம். இந்த இயக்கத்தின் சார்பில் தேசிய பேரவையில் அங்கம் வகிப்பவர்கள் மிகவும் தீவிரமாக, வேகத்துடன் செயற்படவேண்டும் என்று தமிழ்மக்கள் எதிர்பார்த்தால்—அது ஒன்றும் தவறானதல்லவே!

தமிழ் மக்களின் மிகமுக்கிய பிரச்சினையான காங்கேசன்துறை இடைத்தேர்தல் சம்பந்தப்பட்ட எதிர்க்கட்சியின் பிரேரணை தேசிய பேரவையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் தருணங்களிலாவது கூட்டணியின் சகல பா. உ. க்களும் அங்கு சமூகமளிக்கிறார்களா — அதையொட்டிப் பேசுகிறார்களா — என்று கேட்டால், வெட்கமும் துக்கமும்தான் நமக்குப் பதிலாகக் கிடைக்கின்றன.

அவர்கள் பலர்—நாம் சிலர்—நாம் என்ன செய்ய முடியும் என்கின்ற சோர்வு மனப்பான்மை நம்முடைய கூட்டணி பா. உ. க்களுக்கு ஏற்பட்டிருக்குமானால் — அவர்கள் சிறைச்சாலைகளில் ஆண்டுக்கணக்காக மாதக்கணக்காக வாடிக்கொண்டிருக்கும நம்முடைய தமிழ் இளைஞர்களை ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும.

தமிழினத்திற்கு விடுதலை வாழ்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று செயல்பட்டதற்காக நம்முடைய தமிழ் இளைஞர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அங்குகூட உற்சாகத்துடனும் உறுதியுடனும் இருப்பதாக நமக்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இவ்வளவு உறுதியுடனும், தன்னம்பிக்கையுடனும் நம்முடைய இளைஞர்கள் தியாகங்களை தாங்கி—சிரித்த முகத்துடன் விடுதலைக்காக செயல்படும்போது—நம்முடைய தேசிய பேரவை உறுப்பினர்களுக்கு சோர்வு ஏற்படலாமா? மனத்தளர்ச்சி உண்டாகலாமா? தங்கள் கடமைகளை புறக்கணிக்கலாமா?

ஐரிஷ் சுதந்திரப் போராட்டத்தின்போது — ஆங்கிலேயரைப் பெரும்பான்மையாகக்கொண்ட பிரிட்டிஷ்பாராளுமன்றத்தில், மிகச் சிறுபான்மையினரான ஐரிஷ் பிரதிநிதிகள் எவ்வளவு விவேகத்துடனும்வேகத்துடனும் துணிச்சலுடனும், சுதந்திர ஆர்வத்துடனும் செயற்பட்டார்கள்! ஐரிஷ் பிரதிநிதிகள் காட்டிய அந்த வீரமிகு உதாரணத்தை நம்முடைய கூட்டணி பா. உ. க்கள் ஏன் பின்பற்றக் கூடாது?

எனவே கூட்டணி பா. உ. க்கள் அனைவரும் சோர்வை அகற்றி எதிர்காலத்திலாவது கட்டுப்பாட்டுடனும்—உறுதியுடனும் செயற்பட்டு தமிழினத்தின் பிரச்சினைகளை தேசிய பேரவையில் வலிவுடனும் பொலிவுடனும் எடுத்துரைத்து—தேசிய பேரவையை தமிழின விடுதலைப் பிரச்சார மேடையாக தக்கமுறையில் பயன்படுத்துவார்கள் என்று தமிழ் மக்களுடன் சேர்ந்து நாமும் எதிர்பார்க்கிறோம்.

## டெடிகமையும் காங்கேசன்துறையும்

டெடிகமைத் தொகுதி இடைத்தேர்தல் நடந்து முடிந்துவிட்டது.

ஒன்பது திங்களுக்குமுன் தந்தை செல்வாவின் பதவி விலகலால் காலியான காங்கேசன்துறை தொகுதி இடைத்தேர்தலை நடத்தாமல்—மூன்று திங்களுக்கு முன்னர் டட்லி மறைவினால் காலியான டெடிகமை இடைத்தேர்தலை நடத்தி முடித்திருக்கிறது அரசாங்கம்.

டெடிகமைத் தொகுதி இடைத்தேர்தலில், அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி இந்நாட்டு மக்களை வாட்டி வருத்திவரும் ஆட்சியாளர்களுக்கு முகத்தில் கரிபூசி, படுதோல்வியடையச் செய்திருக்கிறார்கள் சிங்கள மக்கள். 1970ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட 352 வாக்குகள் மட்டுமே அரசாங்கத்தினால் அதிகமாக பெற முடிந்திருக்கிறது இத்தேர்தலில்.

காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலை நடத்தாததற்கு அரசாங்கம் கூறிவரும் நொண்டிக்காரணம்—அங்கு வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதாகும். ஆனால் இப்படிக் கூறிவரும் அரசாங்கக்கட்சியினர் தாம்—டெடிகமைத் தொகுதியில் வன்முறையை, அராஜகத்தை, காடைத்தனத்தை, கட்டவிழ்த்துவிட்டு வெற்றி பெற முயன்றதாக எதிர்க்கட்சியான யூ. என். பி. பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருக்கிறது.

அமைதி தவழும் காங்கேசன்துறை தொகுதியில் வன்முறை என்று சொல்லி இடைத்தேர்தலை நடத்தாது யார் பொய் பேசி அறங்கொன்று வந்தார்களோ அவர்களே உண்மையான வன்முறையாளர்கள் என்பதை உணர்ந்து டெடிகமைத்தொகுதி மக்கள் சரியான அடி கொடுத்துள்ளனர்.

டெடிகமைத்தொகுதி மக்களின் தீர்ப்புப்படி — சிங்கள மக்களுக்கு இந்த அரசாங்கத்தில் நம்பிக்கையில்லை என்பது துலாம்பரமாகிவிட்டது!

காங்கேசன்துறைத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல் முடிவு—தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தையும், அது ஆக்கியுள்ள அரசியல் சட்டத்தையும் நிராகரிக்கிறார்கள் என்பதை நிச்சயம் எடுத்துக்காட்டும்.

டெடிகமையில் கிடைத்ததைவிட பலமான அடியை இந்த அரசாங்கத்துக்கு கொடுப்பதற்கு காங்கேசன்துறைத் தொகுதி தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள்!

காங்கேசன்துறைத் தொகுதி மக்களை சந்திக்க அரசாங்கம் துணிவுடன் தாமதமின்றி முன்வருமா?

# 'சிந்தனை செய் தமிழா'

## ஈழவேந்தன் இப்படிக் கேட்கிறார்!

கங்கை கொண்டவன் தமிழன் — கடாரம் வென்றவன் தமிழன் — கனக விசயன் தலைமீது கல்லேற்றியவன் தமிழன் — கற்புக் கரசி கண்ணகிக்குக் கற்சிலை எழுப்பியவன் தமிழன் — கற்கோயில் கலைக்கோயில்களைக் கட்டியவன் தமிழன் — காவிரிக்கு அணைகட்டியவன் தமிழன் — கப்பல் ஓட்டியவன் தமிழன் — கடல் கடந்த நாடுகளுடன் கடல் வாணிபம் செய்தவன் தமிழன்-கடவுளையே அழைத்து கழகத்தில் அமர்த்தித் தமிழை ஆய்ந்தவன் தமிழன் — முத்தமிழ் வளர்த்த மும்முடி தாங்கிய மூவேந்தரால் ஆளப்பட்டு வாழ்விலேயே முழுமை கண்டவன் தமிழன் —இத்தகைய தமிழன் இன்று ஏன் இழிநிலையில் இருக்கின்றான்.

இலங்கைப் பல்கலைக் கழக கொழும்பு வளாக இந்து சங்கம தனது கலை விழாவினைப் புதிய கலை மண்டபத்தில் 30-6-73ல் கொண்டாடியது. இவ்விழாவில் திரு. ஈழவேந்தன் 'சிந்தனை செய் தமிழா' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்ட முறையில் உரை நிகழ்த்தினார். விழாவிற்குத் திரு. சபாபதிப் பிள்ளை தலைமை தாங்கினார்.

ஈழவேந்தன் மேலும் தொடர்ந்து பேசுகையில்:- கங்கை கொண்ட தமிழன் இன்று ஏன் கஞ்சிக்கும்—கந்தைக்கும் கண்ணீர் வடிக்கின்றான். கடாரம் வென்ற தமிழன் இன்று ஏன் தன் இனத்தின் மீது படார் படார் என்று விழும் அடிகளைத் தாங்கிக்கொண்டு பச்சோந்தியாக வாழ்கின்றான். கனக விசயன் தலைமீது கல்லேற்றி தன் இனத்தின் மானம் காத்த தமிழன் இன்று ஏன் தன் மானம் என்ற சொல்லின் பொருள் உணராது தத்தளிக்கின்றான்.

கற்புக்கரசி கண்ணகிக்குக் கற்சிலை எழுப்பிய தமிழன் இன்று ஏன் தன் இனத்தின்—மொழியின் கற்புச் சூறையாடப்படும் போது, தன் வாழ்வகத்தின் புனிதத் தன்மை புதைக்கப் படும் போது பார்த்துக்கொண்டு வாளாவிருக்கின்றான். கலைக் கோவில் கற்கோவில் கட்டிய தமிழன், இன்று தான் கட்டிய கோவிலுக்கு நேற்று வந்த இனத்தவன்—வேற்று மொழி பேசுபவன்—வரலாற்றைத் திரித்தும் மறைத்தும் உரிமை கொண்டாட முனைகின்ற போது ஏன் துடித்தெழுந்து தன் உரிமையை நிலைநாட்டத் தயங்குகின்றான்:


பெருக்கெடுத்தோடும் பெரும் காவிரிக்கு அணை கட்டித் தன் தமிழகத்தை வளம் படுத்திய, தமிழன் தன்னைத் — தன் வாழ்வகத்தை — முற்றாக மூழ்கடிக்க சீறிவரும் சிங்களப் பெருவெள்ளத்தைத் தடுத்து நிறுத்த ஏன் கூசுகின்றான். தமிழனின் வீரம் எல்லாம் பொய்யாய்—பழங்கதையாய் — கனவாய்ப் போய்விட்டனவா?

கப்பல் ஓட்டிய தமிழன் கதறியழும் நிலையில் ஏன் 1958ல் கப்பலில் ஓட்டப்பட்டான். உழைத்து உழைத்து உருக்குலைந்த மலையகத தமிழன் இன்று ஏன் கப்பலில் ஏற்றப்பட்டு இந்தியா அனுப்பப் படுகின்றான் —அதற்கு சாறு பிழிந்தாகிவிட்டது. சக்கை அனுப்பப் படுகின்றது என்பதுதான் பொருளா?

கடவுள் வளர்த்த கன்னித் தமிழைக்—காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கத் துவை நிற்கும் தூய தமிழை இன்பத் தமிழை—இறைவழிபாட்டிற்கும் பயன் படுத்தத் தமிழன் ஏன் இன்று தயங்குகின்றான்? கடவுளுக்குத் தமிழ் தெரியாது என்பது பொருளா? அல்லது கடவுட்கொள்கை தமிழனுக்குப் புறம்பான கொள்கை என்பது பொருளா? ஆரியர் இந்நாட்டிற்கு வருகை தருமுன் தமிழன் எந்த மொழியிற் கடவுளை வழிபட்டான்! வீடு பேற்றினை அடைந்தான்? 'போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர் பின் புகுவேன்' என்ற அப்பரின் அருள் மொழியின் உட்பொருள் என்ன? தமிழன் இறைவனை வழி பட்டதை இது காட்டவில்லையா?

ஆகவேதான் தமிழன் வாழ்வு தலையெடுக்க தமிழன் வாழ்வின் துறைகள் அனைத்தும்— துலங்க — தமிழன் வாழ்வில் நிறைவு காண — பூரிப்பு மல்க — சிந்தனை செய் தமிழா! சிந்தனை செய் தமிழா! என்று வேண்டித் தன் உரையினை ஈழவேந்தன் முடித்தார்.

திரு. கந்தசுவாமி அவர்களின் நாதஸ்வர இசையுடன் விழாவிற் கலை நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.



வில்லினையொத்த புருவம வளைத்தனை
வேலவா—அங்கோர்
வெற்பு நொறுங்கிப் பொடிப்பொடி
யானது வேலவா!—பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர் மீட்சிபெற ஒரேவழி தமிழ்ராஜ்யம் அமைப்பதே!

## ஒற்றையாட்சியின் கீழ் சிங்களவருடன் இணைந்து வாழ்வது சாத்தியமில்லை"

வாசகர்களே! நம்பினுல் நம்புங்கள்! இங்கு தரப்பட்டிருக்கும் கட்டுரை, வட்டுக்கோட்டை பிரதிநிதியாக, இன்று சிங்கள ஆட்சியுடன் ஒட்டிக்கொண்டிருந்து, தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு எதிராக குரல் கொடுத்துவரும் சாட்சாத் ஆ. தியாகராசா எம். ஏ. எம். லிட் அவர்களால் 1956ம் ஆண்டு எழுதப்பட்டு புத்தக ரூபத்தில் வெளியிடப்பட்டதுதான்!

இந்தப் புத்தகத்தைக் காட்டிக் காட்டித்தான் 1956ம் ஆண்டு காலிமுக மைதானத்தில் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்த தமிழரசுக்கட்சியினரை சிங்களக் காடையர்கள் உருட்டி உருட்டி அடித்தார்கள்.

இன்று ஒத்துழைப்புச் சரணுகதிப்பல்லவி பாடும் தியாகராசா அன்று எவ்வளவு வலிவுடனும், ஆதாரங்களுடன் 'தனி நாட்டு' கொள்கையை ஆதரித்து வாதிட்டிருக்கிறுர் என்பதற்கு இக்கட்டுரை எடுத்துக்காட்டு.

—திரு. தியாகராசா மறந்திருந்தாலும், அவருக்கும் நினைவூட்டவே அவரது புத்தகத்திலிருந்து சில பகுதிகளை இங்கு வெளியிட்டுள்ளோம்!

—ஆசிரியர்

"இப்போது இலங்கையில் குடியாட்சி இல்லையென்றே சொல்லவேண்டும். அதனிடத்தில் நாம் இப்போது காண்பது சர்வாதிகார ஆட்சியே. அரசாங்கம் இப்போதைய நிலையில் சக்தியற்று இருக்கிறது. வகுப்புவாதப் புயல்அடித்துக் கொண்டிருக்கிறது. இப்புயல் எப்போதாயினும் நின்றுவிடுமென்று சொல்லமுடியாது.

சிங்களப் பொதுமக்கள் பேசுவனவற்றையும், செய்வனவற்றையும் கொண்டு தமிழ் பாஷைக்கு சம அந்தஸ்த்து அளிக்கப்படாதென்பது தெரியவருகின்றது. காலகதியில் தமிழ் மக்கள், ஒரு ஜனநாயக நாட்டில் அனுபவித்துவரும்; அரசியல், பொருளாதார, பண்பாட்டுரிமைகளை இழக்க நேரிடும். அதுவுமேயன்றித் தமக்கு உரிமையான பிரதேசங்களையும் பறிகொடுக்க வேண்டும். சிங்களவருடைய தாழ்வு மனப்பான்மை, தாராள மனப்பான்மைக்கு இடமளிக்காது. ஆகவே நாம் எவ்வளவு கூடிய கெதியில் பிரிந்து வாழமுடியுமா அவ்வளவுக்கு நல்லது.

### தலைவர்கள் கடமை

இத்தருணத்தில் நமது தலைவர்கள் தத்தம் அபிப்பிராய பேதங்களை நீக்கி ஒன்று சேர வேண்டும். இதைவிட எப்போதாயினும் தமிழரது நிலை ஆபத்துக்கிடமாயிருந்ததில்லை. ஆதலால் தமிழ்த்தலைவர்கள் இப்போதைய நிலையை உணர்ந்து ஒன்றுபட்டுத்திர்மானித்துச் செயலாற்ற வேண்டும். சிங்களவருடைய பேச்சுக்களுக்கும் செயல்களுக்கும், நாம் இனிமேல் தமிழ் ராஜ்யத்தை ஸ்தாபிக்கத்தயங்கலாகாது.

### ராஜ்யம்பெறுவது எவ்வாறு

மேன்மை தங்கிய ராணியாவது, சோல்பரிப்பிரபுவாவது, நமது மீட்சிக்கு வரப்போவதில்லை. டொனமூர்த்திட்டத்திலும், சோல்பரித்திட்டத்திலும் நாம் நமது உரிமைகளை இழந்துவிட்டோம். மூன்ருவதுமுறையும், நாம் மற்றவர்களை நம்பி நமது உரிமைகளை இழந்துவிட முடியாது. வாக்குறுதிகள் வெறும் சூனியமாகும். எத்திட்டத்துக்கும் நாம் சம்மதித்தல் ஆகாது.

எங்கள் மேல் சுமத்தப்பட்ட திட்டங்களெல்லாம், சிறுபான்மையோரது ஜனநாயக உரிமைகளையும்சலாக்கியங்களையும் கிழறுத்து விட்டன. நாம் நம் சுயநிர்ணயத்தைச் சர்வதேச சங்க மூலம் பெற்றுக்கொள்ளலாமா? அங்ஙனம் பெற்றுக்கொள்ள முயல்வது காலத்தையும் சக்தியையும் வீண் விரயம் செய்வதாகும். நாம் நம் நோக்கத்தை வெளியுதவியின்றி எங்கள் முயற்சியாலேயே பெறவேண்டும். அதற்கு அகிம்சையும் பிரார்த்தனையும் நமக்கு உதவிசெய்யும். அத்துடன் சத்தியாக்கிரகத்தின் மூலம் பல்வேறு முறைகளையும் கையாள இயலும் — பலாத்காரத்தை தவிர்க்க வேண்டும் விடா முயற்சியாலும், தியாகத்தாலும் தான் நாம் எம் நோக்கத்தை நிறைவேற்றலாம்.

எழுதியவர்:- ஆ. தியாகராசா எம். ஏ. எம். லிட்.
(இப்போதைய வட்டுக்கோட்டை பா. உ.)

சிலர், சிங்களவர் நாம் கேட்டதை கொடுத்துவிடுவார்களோவென்று வினவக்கூடும். அவர்கள் எமக்கு அந்தஸ்த்தைக் கொடுக்கவோ பிரிவுக்கிணங்கவோ மாட்டார்கள். எமக்குரியதை நாமே உண்டாக்கிக்கொள்ளல் வேண்டும் உலகில் எவரும் மறுக்கமுடியாது. எமது ஆத்ம பலமே எம்மை மீட்கும்.

### தமிழ் ராஜ்யத்தின் பொருளாதாரம்

பிரிவினுல் தமிழ் நாடு பொருளாதாரத் துறையில் தனித்தியங்க முடியாது என்ற பயம் தமிழ் மக்களிடையே இருந்து வருகிறது. வாழ்க்கைத்தரத்தில் குறைவு ஏற்படும் என்பதை மறுக்கமுடியாது. வெவ்வாறு நாடுகள் வெவ்வேறு வாழ்க்கைத்தரத்தையுடையனவாக இருக்கின்றன. எனினும் எல்லா நாடுகளிலும் உள்ள மக்கள் நிலைத்து வாழ்கின்றனர். எல்லாப் பாகங்களிலும் பொருளாதார முயற்சியும் சர்வதேச வியாபாரமும் நடைபெறுகின்றன.

வாழ்க்கைத்தரம்குறைந்தபோதிலும், பிரிந்து வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டால், சேர்ந்து வாழ்வதால் ஏற்படும் நன்மை ஒன்றுமில்லை; தமிழ் ராஜ்யம் விவசாயத்துறையில் சுயதேவையைப் பூர்த்தி செய்வதாயும் கைத்தொழில் துறையில் முன்னேறு வாதாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

தமிழ் ராஜ்ய சர்க்காருக்கு ரூபா பத்துமுதல் இருபது கோடிவரை வருமானம் கிடைக்கும். இதைக்கொண்டு திறமையாக நாம் நிர்வாகம் நடத்தலாம். ஆனுல் இந்தியத் தமிழர் வாழும் பிரதேசங்கள் தமிழ் ராஜ்யத்துடன் சேருவதும் அவர்களை நாம் பொறுப்பேற்றுக்கொள்வதற்குமாக நஷ்ட ஈடாக வேறு சில பிரதேசங்கள் தமிழ் ராஜ்யத்துக்கு கிடைப்பது அவசியமானதாகும்.

### சிங்களவரைச்சாந்தப் படுத்துவதா, அல்லது அவர்களை விட்டு பிரிவதா?

பாஷைக்கு சம அந்தஸ்து கிடைக்குமென்பது பகற்கனவு. தற்போதுள்ள இலங்கையின் பொருளாதார ஸ்திர நிலையைச் சிர்குலைக்காது வைத்திருக்க (இது ஒருபோதும் நடைபெருது) விரும்பினுல் பாஷைப்பிரச்சினையில் சிங்களவரது எண்ணத்தின்படி விட்டுக்கொடுக்க வேண்டும். ஆயின் இந்தியாவில் நடைபெறும் மாதிரி அனுஷ்டிக்கப்படுமெனின் நாம் அங்ஙனம செய்யலாம். இந்தியாவின் கொள்கைஇந்தியமாகாணப் பிரிவு அறிக்கையில் வெளிவரும். அரசாங்க பாஷை சபையின் அறிக்கையிலும் காணலாம்.

இந்தியாவில் 14 தேசிய பாஷையின் ஸ்தானத்தையும், மத்திய அரசாங்கத்தில் இந்தியின் கட்டுப்படுத்தப்பட்ட நிலையையும் பற்றி இந்தியத்தலைவர்கள் விளக்கி உறுதியுங் கூறியுள்ளனர். கல்வியூட்டுவதற்கும், பேசுவதற்கும் 14 பாஷைகளும் சாதனங்களாயிருக்கும். ஆனுல் மத்திய அரசாங்க சேவைக்கு இந்தி உத்தியோகத்தர்கள் இந்தி அல்லாத ஒரு பாஷையும் மற்றைய உத்தியோகத்தர்கள் இந்தியும் பயிலவேண்டும். இவ்வகையான ஒழுங்கு சம அந்தஸ்த்து கொடா விடினும் அதன் சாரத்தையாயினும் கொடுக்கும்.

தமது தாய் மொழியில் பேசும் சுதந்திரத்தையும், கல்வியூட்டும் சுதந்திரத்தையும் தமிழர்க்கு அளித்தால், ஒரு சமஷ்டி அரசியலின் கிழ் தமிழர் இவ்வித நிலையை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனுல் சிங்களவரது அடிப்படையான நோக்கம் இந்தியத்தலைவர்களுடையதைப் போன்றதன்று. அன்றியும் விஷயங்கள் அத்துடன் முடிந்துவிடா. (எனவே சிங்களவருடன் [illegible] குறித்த தமிழர் [illegible] கொள்வதும் புத்தியற்றதும் செய்கை முறையற்றதுமாகும்.) இவ்வுறுதிகளெல்லாம் ஏமாற்றத்துக்கிடமாகும். ஒரு தனி அரசியல் அல்லது சமஷ்டி அரசியலின் கிழ் சம அந்தஸ்து கொடுக்கப்பட்டநாட்டின் முன்னேற்றத்துக்காக தமிழர் ஒத்துழைக்க முடியும். ஆனுல் நிலைபரம் மாருக இருத்தலினுல் 24 லட்சம் தமிழருக்கும் தனி ராஜ்யம் பெறுவதேயன்றி வேறு வழியில்லை.

### வேறுவழிகளும் பரிகாரங்களும்

தமிழரது இப்போதுள்ள பிரச்சினை தீர்வதற்கு, 24 லட்சம் தமிழருக்கு வேருன ஒரு தமிழ் ராஜ்யம் தான் சரியான விடையெனக் கூறினேன். இதற்கு பதிலாக சிங்களவருடன் காரியங்களைச் சீர்படுத்திக்கொண்டு ஒரு தனி (ஒற்றையாட்சி) அரசின் கிழ் வாழ முடியுமென சில தமிழ்த் தலைவர்கள் எண்ணுகின்றனர். இதுபோன்ற தமிழரை அழிக்க கூடியவழி வேறில்லை.

இப்போதுள்ள நிலையை வைத்துக்கொண்டு ஒவ்வொன்றையும் ஆராய்வோம். முதலாவது பாஷைக்கு சம அந்தஸ்து கோருவது. சிங்களவரது மனப்போக்கை அறிந்த எவர்க்கும், இலங்கைச் சரித்திரத்தில் இது முடியாத காரியமென்பது தெரியும். சிங்களவரது ஐக்கியக்குறைவில் தமிழர் அதிசும் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள். அவர்களிடையே பகுத்தறிவுள்ள வெளிநோக்கு உதயமாகுமென்பதுசந்தேகத்துக்கிடமானது.

சம அந்தஸ்து கொடாமல் பாஷை விஷயத்தில் நியாயமான மிகக்குறைந்த எங்களது கோரிக்கைகளைத்தானும் அளிப்பார்கள் என்பதும் சந்தேகத்துக்கிடமானது. நாம் சிங்களத்தைப் படித்த போதிலும எங்களைச் சமமாக அவர்கள் நடத்தப்போவதில்லை.

சம அந்தஸ்தையாவது, அல்லது அதைப்போன்ற ஒன்றையாவது சிங்களவர்கள் அளிப்பார்களென்று இனிமேலும் நமது தலைவர்கள் நம்புகிருர்களாவென்று நான் அறிய விரும்புகிறேன்.

அரசியல் அமைப்பு சட்டசபையில் அடிப்படை உரிமைகளைக்கோருவது. இப்படியான தருணத்தில் இது நடைபெறப்போவதில்லை. இதற்குரிய காலமும் போய்விட்டது. அரசியல் வல்லமை சிங்களவர் கையிலேயே உண்டு. பண்பாடு, பொருளாதார விஷயமாக, இவ்வல்லமையை தமக்கு சாதகமாக உபயோகிக்கக் கற்றுக்கொண்டு விட்டார்கள். அதைத் தளர்த்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

தாங்கள் முன்பு திட்டமிட்ட எவற்றிற்கும் மாருகப்போகும் எவற்றையும் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொள்ளும் சம்மதத்தை சிங்களவரிடமிருந்து எதிர்பார்ப்பது பகற்கனவாகும்.

இதற்கு இணையானதாக இந்திய மாதிரியைப் போன்று, சிறுபான்மையினருக்கு உறுதிகளுடன் ஒரு திட்டத்தைக் கோருவது நான்காவது. ஒருமுறை தாம் பெற்ற வல்லமையைத் தம் நன்மைக்கு பங்கம் ஏற்படும்போது விட்டுக்கொடுப்பது இலகுவில் முடியாதது.


ஐந்தாவது அரசியல் அமைப்புச்சட்டசபை கோருவது; இதுவும் மூன்ருவது, நாலாவது கோரிக்கைகளைப் போன்று சிக்கல்களையுடை

(8-ம் பக்கம் பார்க்க)

24 லட்சம் மக்களுக்கு

## தனித் தமிழ் ராஜ்யம்

(காஷ்மீர் போன்றது)




ஆ. தியாகராசா. M. A., M. Litt.,
காரைநகர்
1956

திரு. ஆ. தியாகராசா தமிழ் இராச்சியம் பற்றி எழுதியுள்ள புத்தகத்தின் முகப்பு அட்டை இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (17)

மனதுக்குப் பிடித்தமில்லாத அந்தச் செய்தியைக் கேட்டது முதலே அவன் மனம் சூனியமாகி விட்டது. அன்றிரவு சாப்பிடக்கூட மனமின்றிப் படுத்துக் கிடந்தான். தூக்கம் அவனை அணுகத் தயங்கியது. அவன் எதிர்பார்த்த விடயம்தான். ஆனாலும் அதைத் தவிர்த்துக்கொண்டு தன் இலட்சியத்தில் முன்னேறி ஓர் உயர்ந்த பதவிக்கு வந்துவிட்டால் ஓரளவாயினும் துணிந்து நிற்கலாம் என்று நினைத்தான். ஆனால் அது அவனை விட்டுப்போய்விட்டது. அதை நினைத்த பொழுது அன்றிரவு பூராக அவன் தூங்கவே இல்லை.

'ராதாலட்சுமிக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது' என்று அவனுடைய நண்பன் கூறியது பொய்யாயிருக்க முடியாது. அப்படியொன்று இல்லாதிருந்தால் ராதா கடிதம் போட்டிருப்பாள். கல்லூரி முகவரிக்கு அனுப்பிய கடிதம் அவளுக்கு நிச்சயம் கிடைத்திருக்கும் அப்படியிருந்தும் அவள் மௌனம் சாதிப்பதென்றால்...? எங்கேயோ அவள் நல்லாக வாழட்டும். அவளுடைய ஆசைகள் நிறைவேறட்டும்' என்று எண்ணியவாறே மனதைச் சமாதானம் செய்துகொண்டான்.

மறுநாள் வெளியான பரீட்சை முடிவு அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதாக இருந்தது. வெளிவாரி மாணவர்களில் அவன் முதலாம் பிரிவில் சித்தியடைந்திருந்தான். 'எப்படியும் ராதாவும் பார்ப்பாள். மகிழ்ச்சியடைவாள்' என்று நினைத்தவாறே மற்ற அலுவல்களைக் கவனிக்க முனைந்தான் வாசுதேவன்,

அதே வேளையில் ராதாலட்சுமி படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாத நிலையில் படுத்திருந்தாள். தலையிலும், முழந்தாளிலும், கையிலும் கட்டுப்போடப்பட்டு இருந்தது. மாடிப்படியிலிருந்து உருண்டு விழுந்ததினால் ஏற்பட்ட காயங்கள் அவள் உடலை அதிகம் பாதிக்கவில்லையாயினும், கவலைகளினால் அவள் உள்ளம் மிகவும் பாதிக்கப்பட்டுக் கிடந்தது.

அவளருகிலேயே உட்கார்ந்திருந்த சோமசுந்தரம் பரீட்சை முடிவுபற்றி மகளிடம் கூறினார். அவள் சித்தியடைவாள் என்ற நம்பிக்கை அவளுக்கே இருந்ததினால் எதுவும் பேசாமல், 'அப்பா, பேப்பரை நான் பார்க்காமா?' என்றாள்.

'கையில் கட்டுப்போடப்பட்டிருக்கேயம்மா'

'அந்தப் பக்கத்தை மட்டும் மடித்துக்கொடுங்கள். இந்தக் கையில் பிடித்துப் பார்க்கலாம்.' என்று இடது கரத்தைக் காட்டினாள்.

அவள் கேட்டுக்கொண்டபடியே பத்திரிகையை மடித்துக்கொடுத்தார் சோமசுந்தரம். யாருடைய முடிவையும் அவள் பார்க்கவில்லை. எங்கே வாசுவின் பெயர் இருக்கின்றது என்று மட்டும் தேடின அவள் விழிகள் அவனது பரீட்சை முடிவைப் பார்த்தபொழுது அவள் இதழ்களில் மலர்ச்சி! முகத்தில் மலர்ச்சி உள்ளத்தில் மகிழ்ச்சி! அவளது காவிய நயனங்களிலிருந்து ஆனந்த மழை பொழிந்தது.

'என்னம்மா இது? நான் சொன்னதை நம்பாமலா பார்த்தாய்?' என்றார் சோமசுந்தரம்.

'இல்லேப்பா வந்து... வந்து...' என்றவள் மேலே எதுவும் கூறாமல் அவன் நினைவோடு ஐக்கியமானாள்.

மாதங்கள் இரண்டு கடந்து விட்டன. சித்திராவுக்குக் கல்யாணமும் முடிந்துவிட்டது. சித்திராவின் கணவன் வீட்டினர் கொஞ்சம் பொருள் வசதியுடையவர்களாகையினால் திருமணமானதும் அவளுடைய உறவினர்கள் எல்லோரும் அவளுடன் கொண்டாட ஆரம்பித்தனர். அவளும் எல்லோருடனும் கொண்டாடி அவர்களின் வீடுகளுக்கும் சென்றுவந்தாள்.

புதிய பதவிக்கு வாசு தெரிவு செய்யப்பட்ட விடயம் எவருக்குமே தெரியாது. அதற்கிடையில் ஒரு நாள் ஊருக்கு வந்திருந்தபோது தான் சித்திரா பற்றி அறிந்தான். அவன் ஒரு நாள் சித்திராவின் வீட்டுக்குச்சென்றிருந்தான். அங்கே அவள் இருக்கவில்லை. திருமணமான பின்னர் கூட பாக்கியலட்சுமி அம்மாளைப் பார்க்க அவள் வந்ததில்லையென்றும் அறிந்தான்.

வசதிகள் கிடைத்ததும் சிலர் நடந்தவைகளை மறந்துவிடுவதுண்டு. அது போல புதுமை மோகமும், தேடுவாரின்றி இருந்தவளைப் பலரும் நீநான்என வரவேற்றுப் பெருமை காட்டியபொழுது அவள் முன் நடந்த சிறுமைகளை நினைக்கவில்லை. அதே வேளையில் அவள் சிறுமைப்பட்ட சமயம் அவளைப்பெருமைப்படுத்தியவர்களை அவள நினைத்துப் பார்க்கவும் இல்லை. இவைகளையெல்லாம் பொருட்படுத்துபவனல்ல வாசுதேவன். ஆனால் சுயகௌரவம் பாதிக்கப்படுவதை என்றைக்குமே பொறுத்துக்கொள்ளமாட்டான்.

தேடுவாரற்ற நிலையில் இருந்த பொழுது ஓடியோடி வந்தவள், இப்பொழுது தேடிச் சென்ற பொழுதும் கூடத் திரும்பிப் பார்க்காமல் இருப்பது என்றால் அதற்குக் காரணம்...? மனித குணத்தின் மாறுபட்ட உணர்வுகள் எத்தன்மையானது என்பதை அவன் அறியாதவனாயிருந்தால் சில சமயம் கோபப்பட்டிருப்பான். ஆனால் தன் சுயகௌரவம் பாதிக்கப்படாதிருக்க வேண்டுமானால் ஒதுங்கி விடுவதுதான் முறை என்று பேசாமல் ஒதுங்கிக்கொண்டான்.

மாடியில் சொகுசான பஞ்சணையில் படுத்து இன்பம் காண்பவன் தான் ஏறி வந்த மாடிப்படியைப் பற்றி நினைப்பதுண்டா? மாடியில் இருக்கும் வசதிகளையும், சுகபோகங்களையும் பற்றி மட்டுமே நினைத்துக்கொண்டிருப்பான். உலகத்தின் போக்கே இப்படித்தான் என்பதைப் புரிந்துகொண்ட பொழுது பெண்களின் சுயநல நோக்கம் எத்தகையது என்பதையும் அவன் உணரத் தலைப்பட்டான். ஆயிரத்தில் ஒருவரோ சிலரோ தவிர மற்றவர்கள் பெரும்பாலும் நலன் கருதிய நோக்கமே குறிக்கோளாகக்கொண்டவர்கள். ஓரிடத்தை விட வேறு ஓரிடத்தில் வசதி கூட இருந்தால் அது எப்படிப் பட்ட இடமாயினும் ஒட்டிக்கொள்ளவே முயலுகின்றனர். அந்த வகையில் வாசு அப்படிப்பட்டவனல்ல. அவன் ஒரு இலட்சிய புருஷன்.

அன்று மாலை பிரயாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு கலங்கிய உள்ளத்துடன் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தான் வாசுதேவன்.

'ஏன்டா வாசு சோர்ந்து போயிருக்கே? என்று அவன் தலையைத் தடவியவாறே கேட்டாள் பாக்கியலட்சுமி.

'அம்மா! எனக்கு ஒரு சோர்வுமில்லை. என்னை ஏனம்மா தனியாகப் பெற்றாய் என்ற கவலைதான். எனக்கும் அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என்றிருந்தால் நான் இன்று இந்த நிலையில் உயர்வு பெற்றதை எண்ணி இந்த வீடே கோலாகலமாக இருக்குமே. அப்பா இருந்திருந்தாலாவது மகிழ்ச்சியோடு ஏதாவது கேட்டு என்னை மகிழ்விப்பாரே. நீங்களோ எனக்கு நல்ல பண்டம் சேகரிப்பதிலேயே மூழ்கிக் கிடக்கின்றீர்கள் நானும் சோர்ந்து போய்—' என்றபோது அவன் விழிகளில் நீர் மல்கி நின்றது.

'பைத்தியக்காரா நீ படித்தவனா?' என்று இறுமாப்புடன் கேட்டாள் பாக்கியலட்சுமி.

'அம்மா! நீங்கள்'...என்று அவளை நிமிர்ந்து நோக்கினான் வாசுதேவன்.

'வாசு! நீ பட்டம் பெற்றவன். பெரும் பதவிக்குப் பயிற்சி பெறப்போகின்றாய். ஆனால் உன் குழந்தைத்தனமான மனது மட்டும் மாறலையேடா! உனக்கு வரும் உயர்வைக் கண்டு நான் மகிழ்ச்சி அடையவில்லையென்று நினைக்கின்றாயா? வாசு! மகிழ்ச்சிக்குக் காரணமானது எதுவோ அதுவே துன்பத்துக்கும் காரணமாகிவிடுகின்றது. உன்னை ஒட்டி நிற்கின்ற அற்ப பந்த பாசங்கள்விலகும்பொழுதே நீ தூய மனத்துடன் உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படுகின்றாய். நீ பெறப்போகும் பதவியிருக்கே. அது பந்தம், உறவுமுறை என்ற திரைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்று. நீதி, நியாயம், கடமை, கண்ணியம் என்ற உண்மை நிலைக்கு உட்பட்டது. இதனால்தானே என்னவோ உன்கூட எவருமே பிறக்கவில்லை. அந்தத் தொந்தரவுகளுக்கு உன்னை ஆண்டவன் ஆளாக்கவில்லை. எதுவந்தாலும் அது நன்மைக்கே என்று நினைப்பவள் உன் தாய். அதுபோன்று நீயும் நடந்துகொள்ள வேண்டும். நீ வகிக்கப் போகும் கடமையில்மூழ்கி என்னையே மறந்துவிடப் போகின்றாயோ என்ற பயத்தினால் தான்டா நான் மகிழ்ச்சியே இல்லாத பிணமாக நடமாடுகின்றேன்.'

என்று அவள் கூறியபொழுது, ஹோவெனக் கதறி அழவேண்டும் போலிருந்தது வாசுதேவனுக்கு. அவன் இதயத்திலிருந்த சுமைகளைப் படிப்பறிவில்லாத அவன் தாய் சில வினாடிப்பொழுதில் அகற்றிவிட்டாள் என்பதை எண்ணும்பொழுது, தாயெனப் பட்டவள் எவ்வளவு உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கின்றாள் என்று பெருமையடைந்தான் வாசுதேவன்.

'ஈன்றபொழுதில்...' என்ற வள்ளுவன் குரல் அவன் மனதில் தோன்றியது. ஒரு மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்லக் கேட்கும் தாய் அவனைப் பெறும்பொழுது பட்ட கஷ்டத்தினையே மறந்து பேரின்பமடைகின்றாளாம். அவனைச் சான்றோனுக்கும் பொறுப்பு அவளைச் சாந்ததுதானே. அதனை உணர்ந்துகொண்டபொழுது ஆனந்தக்கூத்தாட வேண்டும் போலிருந்தது வாசுவுக்கு.

'அம்மா அம்மா' என்று அவளைக் கட்டிப்பிடித்துக்கொண்டே, 'அம்மா! எப்பதவி வந்தாலும், எங்கே நான் சென்றாலும் அதற்கெல்லாம் காரணம் நீ தந்த இந்த வாழ்வு தானே.' என்றான்.

'டேய்! இது என் கடமையெடா.'

'என் கடமையும் எனக்குத் தெரியும். நீயும் என்கூடப் புறப்படம்மா.'

'டேய் வாசு நீ என்னடா சொல்லுகிறாய்?'

'என்னோடு புறப்படுங்கள் என்கிறேன்.'

'வாசு! அவசரம் வேண்டாம். நான் சொல்வதைக் கேள். உன் பயிற்சி முடியும் வரை நான் இங்கேயே இருக்கின்றேன். அதன் பின்பு நீ வரச் சொன்னாலும் சரி சொல்லாவிட்டாலும் சரி நானே வருவேன்டா.'

'அம்மா அம்மா நீங்க.... என்று நிறுத்திவிட்டு, அவள் கால்களில் விழுந்து வணங்கினான.

'வாசு! நான் உன்னை மகனாகப் பெற்றதினால் இதுவரை அடையாத மகிழ்ச்சியாடா எனக்கு இப்பொழுது வந்துவிட்டது? ஊரும் உலகமும் உன்னை நல்லவன் என்று கொண்டாடவேண்டும். அதுதான். என் ஆசை. உன்னை நான் நல்லவன் என்று கூறுவதால் எனக்குப் பெருமை வந்துவிடாது. உலகம் உன்னைப் போற்ற வேண்டும். அதுதாண்டா எனக்கும் பெருமை. உன்னைப் பெற்றுவிட்டுப் போன உன் அப்பனுக்கும் பெருமை.' என்றாள்.

'அம்மா! இதுவரை நாளும் நான் உங்களுக்கு எதையும் மறைத்தவனில்லை. ஆனால் ஒரு விடயத்தை மறைதது விட்டேன். அந்த விடயத்தில் நான் உறுதி எதுவும் அளிக்காததினால்தான் முற்றுப் பெறாத விடயத்தைக் கூறி ஏன் உங்களைக் குழப்புவான் என்று பேசாமல் விட்டுவிட்டேன். ஆனால் இப்பொழுதோ அந்த விடயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது. யாராகத் தொடக்கினார்களோ அவர்களே முடிவையும் வைத்துவிட்டார்கள்.'

'என்னப்பா அது?'

'அதை இனி ஏன் தான்...'

'வாசு! என் பிள்ளை எனக்கு ஒழித்தாலும் எனக்கு எல்லாம் தெரியுமடா. அந்தப் பெண் உன் உண்மை நிலையைப் புரிந்துகொண்டிருக்கின்றாள். ஆசைப்பட்டிருக்கின்றாள், ஆனால் பெற்றோர், கௌரவம், அந்தஸ்து என்பன உன்னை அடைய முடியாத நிலைக்கு அவளைப் பிரித்து வைத்திருக்கும். இதனால் தான்டா சொன்னேன் உன்னைப் பிடித்திருந்த அற்ப பந்த பாசங்கள் என்று...' அவள் கூறிக்கொண்டிருக்கும் பொழுது வாசு தலை குனிந்தான்.

'அம்மா அவள்... அவள்' என்றவனால் மேலே எதுவும் பேசமுடியவில்லை.

'என்னப்பா அவளுக்கு வேறு கல்யாணம் நிட்சயமாகி இருக்கும். அப்படித் தானே?'

'ஆமாம்மா.'

'அது அவள் தலைவிதி. இந்தப் பெண் சித்திராவைப் பார். ஒரு நாளைக்கு எத்தனை தடவை வருவாள். கல்யாணத்தின் பின் ஒருநாளாவது உலகிலே நட்பு, காதல் இவையெல்லாம் இன்று வியாபாரம் ஆகிவிட்டது. ஆதாயம் இருந்தால் தான் எதுவும்.'

'எல்லோரையும் அப்படிச் சொல்லாதேயம்மா. ராதா பெரும் பணக்காரி. அவள்...'

'என்னவோ எல்லாம் இறைவனருளால்தான் நடக்கிறதப்பா. உனக்கு எந்தக் குறைவும் வைக்காமல் எல்லா நிறைவையும் ஆண்டவன்அருள்வான்.' என்றுகூறி விட்டுச் சென்றுவிட்டாள்.

அன்று மாலை மீண்டும் சித்திராவின் வீட்டுப் பக்கமாகச்சென்றான். அவள் உள்ளே இருந்தாள. வீட்டினர் அவனை வரவேற்று உபசரித்தனர். சில நிமிடங்களின் பின் அங்கே வந்த சித்திரா, 'அண்ணு நீங்களா? நாங்கள் அவசரமாகஓரிடத்துக்குப் போகப் புறப்பட்டிருக்கின்றோம். இருந்து கதைத்துவிட்டுப் போங்கள்.' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டாள்.

அவளுக்கு அவனளித்த கடைசிச் சந்தர்ப்பத்தினையும் அவள் தவறவிட்டுவிட்டாள்.

நினைவுகள் கனத்த மனத்தோடு வீட்டுக்குத திரும்பிய வாசு தன் வீட்டு வாசலில் நின்று ஒரு கார் புறப்பட்டுச் செல்வதைக்கண்டு விரைந்து ஓடி வந்தான்.

—வளரும்.

## மாணவர் முன்னணி

அண்மையில் முள்ளியவளையிலுள்ள உயர் வகுப்பு மாணவர்கள் ஒன்று கூடி மாணவர் முன்னணி என்ற ஒருவட்டத்தை அமைத்துள்ளனர்.

தமிழர் கூட்டணியின் இலட்சியத்தை நிறைவேற்றப்பாடுபடுவதே இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருப்பதுடன், உயர் வகுப்பு மாணவ மாணவிகளுக்கிடையே இன்றைய அரசியல் நிலையை தெளிவுபடுத்துவது மாகும.

மேற்படி முன்னணியில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவாகினர். தலைவர், கனக தவராசன், செயலாளர்: சிவசோதி, பொருளாளர்: க. தர்மலிங்கம். யோகலிங்கம், பரஞ்சோதி, சிவலிங்கம், தாகிர், சிவபாலன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமையற்ற...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி சுய தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கும் மிளகாய் உற்பத்தி வியாபாரிகளின் கைகளிலே இருக்கின்றது. இதில் எது அரசின் பொருளாதாரம் எது பொன்னம்பலத்தின் பொருளாதாரம்.

தமிழ் மக்கள் உழைப்பாளிகள், சுறுசுறுப்பானவர்கள். இவர்களின் சொந்தப் பூமியில், தமிழ் பிரதேச மண் இவர்களுக்குக் கை கொடுக்கிறது. தன்னை மறந்து சிங்களப் பகுதிகளுக்குச் சென்றவர்களை எமது 'தமிழ் (மண்) தாய்' சிந்திக்க வைக்கிறாள்.

எங்கள் வாழ்வு எங்கள் கைகளில் என்பதை தமிழ் மக்கள் மறக்கவேண்டாம். புகழுரைகள் எம்மை நோக்கி வரலாம் அத்தோடு நாம் அடிமைகள் உரிமையற்றவர்கள், சொந்த மொழியில் கருமமாற்றத் தகுதியற்றவர்கள். எமக்கென ஒரு பிரதிநிதியை தெரிவு செய்யும் ஜனநாயக உரிமையும் இல்லாதவர்கள். ஆம், பே களாக, ஊமைகளாக அடிமைகளாக, ஆளப்படுபவர்களாக, கூலிகளாக, பணம் மட்டும் சம்பாதிக்கத் தெரிந்தவர்களாக இந்த நாட்டு எசமான்களுக்கு, சிங்களத் தலைவர்களுக்கு வெங்காயமும், மிளகாயும், உருளைக் கிழங்கும், முருங்கைக்காயும், மாம் பழமும், நெல்லும், கரும்பும், உற்பத்தி செய்து கொடுத்து எமது அடிமைத்தனத்தை ஏற்றுக் கொள்ளப் போகிறோமோ?

### சிந்தியுங்கள்

வடக்கின் வளம் தரும் பனைவள ஆராய்ச்சி நிலையம் இன்னமும் ஏன் நிறுவப்படவில்லை. நிறுவப்பட்டால் எத்தனை ரூபா அந்நியச் செலாவணியை பனை மூலம் நாம் பெறலாம் என்பதை பனைவள ஆராய்ச்சி நிலையம் நிறுவ முன்பு நியமிக்கப்பட்ட குழு சிபார்சு செய்ததே! மக்களை ஐக்கிய முன்னணி அரசும் வாக்குத் தந்ததே அமைச்சர்கள் அமைத்து தரும் பனைவள ஆராய்ச்சி நிலையம் கிடைக்குமா? அமைச்சரின் சிபார்சு அஸ்தமித்து விட்டதா?

இதை எல்லாம் பொருளாதாரப் பொன்னம்பலத்திடம் நாம் கேட்டுப் பலன் பெற முடியுமா? முடிந்தால் அவர் அவரது அரசிடம் கேட்டுப் பெற்றுத் தரட்டும் அல்லது நாம் ஆண்டவனிடம் கேட்டுப் பெறுவோம்.

---

## சாதிக்கல...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொய் ஒன்றை வெளியிட்டு தனது கீழ்த்தரமான முறை ஒன்றை எடுத்துக் காட்டி விட்டது.

திரு. தர்மலிங்கம் அவர்களை எமது சபை விளையாட்டுக்கு அழைக்காமல் இருந்த போதும் அழைத்ததாக செய்தி வெளியிட்டது வருத்தத்துக்குரியது.

அமைதியான முறையில் இருக்கும் யாழ்ப்பாணப் பகுதியில் அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய இப்பொய் வெளியீட்டால் சாதிக் கலவரத்தை இந்த தினபதி பத்திரிகையே உருவாக்குவதுபோல் இச்சபை கருதவேண்டி இருக்கிறது.

தமிழ் மக்களின் வெறுப்புக்கு இலக்காக இருக்கும் இப்பத்திரிகை நாட்டில் வெளிவருவதனால் உள்நாட்டுக் கலம்பகத்துக்கும் நாட்டின் பாகாப்புக்கும் சவாலாக இருக்கிறது.

ஆகவே பொய்யான செய்திகளை வெளியிடும் தினபதி பத்திரிகையை உடனடியாக தடை செய்ய வேண்டுமென்றும், மேற்படி செய்தி சம்பந்தமாக ஓர் பகிரங்க விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பத்திரிகை சபைத் தலைவர் அவர்களை [illegible] டுக்கொள்கிறதெனவும் [illegible] சபை தீர்மானிக்கின்றது.''

# "ஆலயப்பிரவேசத்துக்கு நான் எதிரியல்ல"

## கூட்டணியின் கொள்கைகளுக்கு நான் என்றும் கட்டுப்பட்டவன்

## சுந்தரர் அறிக்கை; எம். சிக்குநூடு!

முன்னாள் வவுனியா பா. உ. வும் தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு. சி. சுந்தரலிங்கம் அண்மையில் தந்தை செல்வாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்;-

'கூட்டணியின் ஆறு அம்சத் தீர்மானத்துக்கு நான் கட்டுப்பட்டுள்ளேன். அப்படியிருந்தும் சிறுபான்மைத் தமிழரின் ஆலயப் பிரவேசப் பிரச்சினையில் எனது போக்கு பற்றி சிலர் குறைப்பட்டுள்ளனர்.

சிறுபான்மை மக்களின் ஆலயப் பிரவேசத்தை நான் எப்போதும் மறுத்ததில்லை அல்லது எதிர்த்ததுமில்லை; அவர்கள் உரிமைகளை என்றும் மறுத்ததும் இல்லை.

ஆனால் இரத்தம் சிந்தி, கொலைகளுக்கும் பலாத்காரத்துக்கும் வழி வகுக்கும் வன்முறையான ஆலயப் பிரவேசத்தையே நான் எப்போதும் எதிர்க்கிறேன்.

கதியற்ற இந்த சிறுபான்மை மக்களை கம்யூனிஸ்டுகளும், மற்றும் சிலரும் பகடைக்காய்களாக பாவிக்கிறார்கள்.

'இன்றும், காரைநகர் பாலா வோடை அம்மன் காவிலில் நடக்கும் சிறுபான்மை மக்களுடைய சைவ ஆலயப் பிரவேச இலட்சியம், சில அரசியல் வாதிகளால் பங்கப்படுத்தப்படுகிறது என்று எல்லோரையும் உணரச்செய்கிறது.

''நான் ஆறு அம்சத் தீர்மானத்தை ஏற்று அதற்கு விசுவாசமாக இருக்கக் கடமைப்பாடுடையவன்.

''எங்கள் விசுவாசத்துக்குரிய தலைவராக இருக்கும் தங்களை நான் மேலும் கேட்டுக்கொள்வதாவது: தமிழர் கூட்டணியின் குழுக்களின் சகல அங்கத்தவர்களும் கூட்டுப் பொறுப்பு என்ற தத்துவத்ததால் கட்டுப்பட்டுள்ளனர். யாருக்காவது தனிப்பட்ட அபிப்பிராயங்கள் இருந்தாலும் அவை குழுக்களில் தீர்க்கப்பட வேண்டியவை. எடுத்த தீர்மானங்களை அங்கத்தவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.''

---

## மூதூரில் தமிழ் கல்வெட்டு கண்டுபிடிப்பு

மூதூரில் பதினொரும் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. செ. குணசிங்கமும் அவரது குழுவினரும் நடத்திய ஆராய்ச்சியின் போதே இது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. கல்வெட்டு ஆராய்ச்சியை மூதூர் பகுதியில் இவர்கள் தொடர்ந்து நடத்திவருகின்றனர்.

---

## கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவு!

### வி. பி. யார் பக்கம்?

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் டாக்டர் விக்கிரமசிங்கா கோஷ்டிக்கும், பீட்டர் கெனமன் கோஷ்டிக்குமிடையே ஏற்பட்ட கடும் பூசல் காரணமாக, பீட்டர் கெனமன் கோஷ்டியினர் எனக் கருதப்படும் எம். ஜி. மெண்டிஸ், குமாரசாமி அர்ஜுனலிஸ் அப்புகாமி ஆகியோருக்கு விக்கிரமசிங்கா கோஷ்டி கட்சியிலிருந்து கல்தா கொடுத்துள்ளது.

வெளியேற்றப்பட்ட மூவரும் புதிய கம்யூனிஸ்ட் கட்சியொன்றை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர் புதிய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டால், பீட்டர்கெனமனும் வெளியேறி புதிய கட்சியில் சேரலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் கடும் போட்டியில் — தமிழ் பிரதேசத்திலுள்ள வி. பொன்னம்பலம், அ. வைத்திலிங்கம் போன்றோர் யார் பக்கம்? டாக்டர் விக்கிரமசிங்காவின் தீவிரவாதக்கோஷ்டியா? அல்லது அரசாங்கத்தை அண்டி வாழவேண்டுமென்னும் பீட்டர் கெனமனின் மிதவாதக்கோஷ்டியா? என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள்.

---

## எல்லாந்தமிழ் இயக்கம்

எல்லாம் தமிழ் இயக்கம் சைவ ஊழியர் கழகப் பேரவையின் மாபெரும் இயக்கமாக அண்மையில் மலர்ந்துள்ளதை மகிழ்வுடன் வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

அண்மையிற் பேரவை சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய மாணிக்க வாசகர் விழாவில் ஈழத்தில் பாடல்பெற்ற தலங்களாகிய கோணேசர் கோயில் கேதீஸ்வரக் கோயில் ஆகியவற்றின் படங்களைத் தாங்கியதோடு இக் கோயில்கள் பற்றி நாயன்மார்கள் பாடிய பாடல்களும் பொறிக்கப்பட்ட கடித உறைகள் (இருபத்தைந்து கடித உறைகள் ஒரு ரூபா என்ற அடிப்படையில்) பல்லாயிரக் கணக்கில் விற்பனை செய்யப்பட்டன.

இதை யொட்டிய ஏனைய விபரங்களுக்கு திரு. த. காங்கேசன் செயலாளர் 6/9 B பாதிபா வீதி, கொழும்பு 5. என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

---

## சுகததாசவுக்கு நவம அனுதாபம்

வடகொழும்பு பா. உ. திரு. வி. ஏ. சுகததாசா அவர்களின் மறைவு குறித்து, அன்னுருக்கு தமிழர் கூட்டணி சார்பில் தேசிய பேரவையில் அஞ்சலி செலுத்தியுள்ளார் திரு. வி. என். நவரத்தினம்.

'சுகததாசவின் மறைவினால், தமிழ் சமூகம் மற்றொரு தென்னிலங்கை நண்பரை இழந்துவிட்டது. திரு. சுகததாசா இன, மொழி பேதமின்றி சேவையாற்றியவர்'' என்று தமது உரையில் திரு. நவரத்தினம் குறிப்பிட்டார்.

---

## வன்முறைகளுக்கு மத்தியிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அதே நேரத்தில் வன்முறைகளுக்கும் அராஜகத்துக்கும் மத்தியில் டெடிகமை இடைத்தேர்தலை மட்டும் அரசாங்கம் நடத்தி மூக்குடைபட்டிருக்கிறது.

இதில் வேடிக்கையென்னவென்றால் எந்த அரசாங்கம் காங்கேசன்துறையில் வன்முறை நடப்பதாக கூறி இடைத்தேர்தலை நடாத்தாது தட்டிக்கழித்து வருகிறதோ அதே அரசாங்கக் கட்சியினர்தாம், டெடிகமையில் வன்முறைச் சம்பவங்களில் முன்னணி வகித்து செயல்பட்டதாக யூ. என். பி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு. ருக்மன் சேனநாயகா பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருக்கிறார்.

'எமது (ஐ. தே. க.) கட்சிக் காரியாலயமொன்றுக்கு தீ வைத்தது; ஐ. தே. கட்சி ஆதரவாளர்களை தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்தது. கூட்டம் நடாத்தவும், ஒலிபெருக்கி பயன்படுத்தவும் எமக்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டது; பிரசார இயக்கங்களின் போது அரசாங்க கூட்டுத்தாபன வாகனங்கள் பகிரங்கமாக உபயோகப்படுத்தப்பட்டன; இவற்றில் பிரயாணம் செய்த 'குண்டர்கள்' எமது பெண்களையும் ஏனையோரையும் துன்புறுத்தினர்— இந் நடத்தை குறித்து பொலீசுக்குப் புகார் செய்து விடத்து எனக்கு உதவியளித்த வாக்கு ஏஜண்டுகளும் ஏனையோரும் கைது செய்யப்பட்டனர்; ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் பத்துப்பேரின் கார்கள் தாக்கப்பட்டன; காயமடைந்த 100 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்; நூற்றுக்கணக்கான பொலீஸ் அதிகாரிகளின் முன்னிலையிலேயே குண்டர்களின் வன்செயல் தொடர்ந்தது; வரக்காப்பொல பிரதான நகரில் கல்பிட்ட மட வீதியிலும் டெடிகம வீதியிலும் தடைகளைப் போட்டு மக்களை வாக்களிக்க முடியாதபடி செய்தனர்!!

—இவ்வாறு வன்முறைக்கு பொறுப்பான குண்டர்கள் என்று ருக்மன் சேனநாயகாவினால் பகிரங்கமாக குற்றம் சுமத்தப்படும் இன்றைய அரசாங்கத்தினர், அமைதி நிறைந்தகாங்கேசன்துறைத் தொகுதியில் வன்முறை நடப்பதாக கூறி தேர்தலை நடத்தாமல் விடுவது பெரும் கேலிக்கூத்தாகும்.

அரசாங்கத்தினர் தமது வன்முறைச் 'சாட்டையும்' இனித் தொடர்ந்து கூற முடியாது; வடக்கு கிழக்கு மாகாணங்களில் கவலை தரக்கூடிய எவ்வித அசம்பாவிதங்களும் இல்லையென்றும் பூரண அமைதி நிலவுவதாகவும், அண்மையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பொலீஸ் தலைவர் திரு. ஸ்டான்லி சேனநாயகா கூறி விட்டார்.

எனவே மேலும் போலிச் சாட்டுக்களை கூறி இடைத் தேர்தலை இழுத்தடிக்காமல் உடனடியாக தேர்தலை நடத்த அரசாங்கம் நடவ[illegible] கூறி முடித்தார்.

---

## வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமானமற்ற அரசின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வேறு எப்படி வாழ்வு கொடுக்கலாம்— நிவாரணம் தேடலாம்—என்பது குறித்து தமிழர் கூட்டணி இப்பொழுது ஆராய்ந்துவருகிறது.

இம்மாதம் 22ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் இதுபற்றி ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

---

## ஆளுநங்கட்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலாசார அமைச்சரினால் கொண்டு வரப்பட்ட சிலைகள் வழிபாட்டு இடங்கள் கட்டுப்பாட்டு மசோதா எதிர்க்கட்சியினால் தோற்கடிக்கப்பட்ட சம்பவமாகும். அரசாங்க மசோதா ஒன்று, 1970 பொதுத்தேர்தலில் இன்றைய ஆட்சியாளர் பதவிக்கு வந்த பின்னர் இப்போதுதான் முதன்முதலாக தோற்கடிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

'வெட்கம், வெட்கம், அரசாங்கமே பதவி விலகு' என்று எதிர்க்கட்சிகள் தேசிய பேரவையில் குரலெழுப்பின.

---


## திருமண அழைப்பு

### சோமா — இந்திரா

ச. த. சின்னத்துரை (ஜே.பி.) தம்பதிகளின் (உரிமையாளர் லீலா ஸ்டோர்ஸ், நியூ லீலா அச்சகம்)

புதல்வன் திருநிறைச் செல்வன்

**டாக்டர் சோமசேகரம்**

(சுலைமான் மருத்துவமனை — கொழும்பு) அவர்களுக்கும்.

டாக்டர் மு. குமாரதேவா (மலேசியா) அவர்களின்

சகோதரி திருநிறைச் செல்வி

**இந்திராதேவி**

(மலேசியா வழக்குரைஞர் காலஞ்சென்ற R. முத்துராமலிங்கம் ஜே. பி. தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி) அவர்களுக்கும்

நிகழும் பிரமாதீச வருஷம் ஆனி மாதம் 30-ம் திகதி (14-7-73) சனிக்கிழமை மாலை 4.40 மணி முதல் 6.00 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில் கொழும்பு பம்பலப்பிட்டி லோறன்ஸ் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நிகழவிருக்கும் திருமண வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ச. த. சின்னத்துரை தம்பதிகள்.
62/1, பண்டாரநாயக்கமாவத்தை.
கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திடீர்' அமைச்சரே! குமாரசூரியரே!

# இதோ, இது உங்களுக்கு!

தேர்தலிலே போட்டியிட்டுத் தமிழ் மக்களை நாடி வாக்குக் கேட்டுப் பா. உ. வாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லையானாலும் ஏதோ ஒரு வழியாக அமைச்சர் பதவியேற்று, ஏற்ற பதவியினை 'அலங்கரித்து' அத்துடன் தமிழ் மக்களினதும் தமிழ் மொழியினதும் வாழ்வினையும் உரிமையினையும் நிர்ணயிக்கும் தலையாய கடமையினைத் தமிழ் மக்கள் உங்கள் தலைமேல் சுமத்திடாது இருந்திடவும், தாங்கி நிற்கும் உங்களுக்கு...

அரசியல் அமைப்பு நிர்ணய சபையில் தமிழரசார் சமர்ப்பித்த, தமிழ் மக்களுக்கு வாழ்வளிக்க வல்ல பிரேரணைகளை மூர்க்கத்தனமாக எதிர்த்துத் தோற்கடிக்க அரசுக்கு உறுதுணையாக இருந்ததுடன், அவ்வண்ணம் திருத்தப் பிரேரணைகள் யாவற்றினையும் தோற்கடித்த அரசினைத் தொடர்ந்து ஆதரித்தது அவர்களுடன் கூடிக் குலவி மகிழ்ந்திருக்கும் உங்களுக்கு...

சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் அழிக்க முடியா அந்தஸ்து அரசமைப்பினைக் கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொண்டதுடன் இவ்வாறான நயவஞ்சகமான அரசமைப்பினை நிறைவேற்றிய பெருமையடைத்த ஆளவந்தோருக்குச் சலம் பூவொடு தூபமிட்டு வாழும் உங்களுக்கு...

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும், அரசமைப்பில், சிங்களத்துக்கும் சிங்களருக்கும் அளிக்கப்பட்டுள்ளதைப் போன்று சம உரிமைகளை அளிக்க மறுத்து, அமைச்சர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப மாற்றி அழிக்க வல்ல நீதி மன்ற மொழிச் சட்டம் போன்ற சாதாரண சட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் 'தமிழ் மக்களுக்கும் உரிமை வழங்குகிறோம்' என வெளி உலகுக்குக் காண்பிக்கவும், இதனால் காங்கேசன் இடைத் தேர்தலில் கட்டுப்பணத்தையாவது காப்பாற்றிடலாம் எனக் கனவு கண்டும், பொய் வேடம் பூணும் அரசின் ஆத்ம நண்பனான உங்களுக்கு...

1966ல் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விசேட சட்டத்துக்கான பிரமாணங்களையேனும் செயற்படுத்திட கொல்வின், பீலிக்ஸ் போன்ற 'அமைச்சர் பெருமக்கள்' மறுத்த போதும் அதனை எதிர்த்து ஒரு வார்த்தையேனும் பேசாது விடுத்துத் தொடர்ந்து அமைச்சரவையை அலங்கரிக்கும் உங்களுக்கு...

'தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து அளிக்க மாட்டோம்' எனப் பீலிக்ஸ் அவர்கள் கூறிய பின்னரேனும் இந்த அரசை விட்டு விலகாது, 'தமிழ் மக்களுக்கு உரிமை பெறவே அரசுடன் ஒத்துழைக்கிறேன்' என மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டு தொடர்ந்து இந்தத் 'திமிர்' பிடித்த ஆளவந்தோருக்குச் சந்தனம் பூசிச் சாமரை விசிடும் உங்களுக்கு...

தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழில் போதிக்காது விடுத்துச் சிங்களத்தையும் புத்தத்தையும் அரசு திணித்திடும் போதினிலும் அதனைக் கண்டித்திட மறந்து வாய் மூடி மௌனியாக இருக்கின்ற உங்களுக்கு...

தமிழ் இனத்தையும் தமிழ் மொழியையும் அழித்துத் தனிப் பௌத்த சிங்கள இலங்கை காணத் துடிக்கும் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளுக்கு 'அடிமை' செய்து. வாழும் உங்களுக்கு...

தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்க கூட்டுத்தாபனத் துறைகளில் வேலை வாய்ப்புகளை மிக மிகச் சுருக்கியும், தகைமை பெற்றிருந்தும் தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதியில் திட்டமிட்டுத் தமிழ் இன ஒதுக்கல் கொள்கையினைக் கையாண்டும் உங்கள் அரசு செயற்படுகின்ற போதிலும் இவைகளுக்கெதிராக ஒரு ஆட்சேபனைக் குரலும் எழுப்பிட விரும்பாத உங்களுக்கு...

தமிழ் மக்களுக்குத் தேர்தலின்போது ''தமிழ் இன மொழி உரிமைகளைக் காப்போம். தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துப் பெற்றுத் தருவோம்'' என்று பல வாக்குறுதிகளைத் தந்து தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றபின், தமிழ் மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளை மறந்து தமிழரது மொழி, இன, பிரதேச உரிமைகளைப் பறித்திடும் அரசியலமைப்பினை நிறைவேற்றிப் பெருமை கொள்ளும் சிங்களச் சர்வாதிகாரிகள் எறியும் எச்சிலிலை நக்கிடும் அருளம்பலம்' தியாகராசா, மாட்டின், ராசன் செல்வநாயகம் ஆகிய நால்வருடன் ஐந்தாவநான 'ஆள்பிரட்டித்' துரையப்பாவுக்கும் இவர்போன்ற சுயநலமிகளுக்கும் தலைமைதாங்கும் 'அவிவேக பூரண குரு' வான உங்களுக்கு...

''சிங்களம் மாத்திரமே இந்நாட்டின் அரச கரும மொழி'' என அரசமைப்பில் இருப்பதனை திருத்தினால்லாது, போலியான சாதாரண சட்டங்கள் ஆயிரத்தை நிறைவேற்றினாலும் தமிழரதும் தமிழ் மொழியினதும் உரிமைகள் நிலை நாட்டிடவியலாதென்பதனைத் தெரிந்திருந்தும், ''அரசியலமைப்பிற்குத் திருத்தம் வேண்டும்'' என அரசுக்குக் கூறுது விடுத்து எதுவுமே தெரியாதது போல நாடகமாடுகின்ற உங்களுக்கு......,

ஒரு சில அற்ப சலுகைகளை உங்களுக்கும் உங்களைப் போன்ற ஒரு சிலருக்கும் வழங்கிடுவதன் மூலம், இழந்த உரிமைகளுக்காகப் போராடுகின்ற தமிழ் இனத்திலிருந்து உங்களையும் உங்களைப் போன்றவர்களையும் பிரித்தும், உங்களினதும் உங்களைப் போன்ற அந்த ஒரு சிலரினதும் ஆதரவைக் காண்பித்துத் ''தமிழரின் ஆதரவும் தமது அரசுக்கு உண்டு'' என வெளி உலகத்திற்குப் பாவனை செய்தும் நாடகமாடுகின்ற சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் பிரித்தாளும் தந்திரோபாயத்துக்கும் பலியாகின்ற உங்களுக்கு......,

தமிழரது குறைந்த பட்சக் கோரிக்கையான 6 அம்சக் கோரிக்கையேனும் வழங்கிட அதிகார மமதையதால் மறுத்திட்ட அம்மையாரவர்களின் அமைச்சரவையில், கீறல் விழுந்த இசைத்தட்டினைப் போன்று ''இன ஒற்றுமை'' ''இன ஒற்றுமை'' என மீண்டும் மீண்டும் அர்த்தமறியாது கூறிக் கொண்டு கொலுப் பொம்மை போன்று வீற்றிருக்கும் உங்களுக்கு......,

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நடாத்திட வசதியளிக்கும் முகமாக, அரசு நிலங்களில் அனுமதியின்றிக் குடியேறும் காணியற்ற தமிழ் மக்களை அந்நிலங்களிலின்றும் வெளியேற்றிடவெனத் தமிழருக்கெனத் தனியாகச் சட்டங்களை அவசரம் அவசரமாகத் தயாரித்து நிறைவேற்றிடும் உங்கள் அரசின் சர்வாதிகாரப் போக்கினைக் கண்டித்திட நெஞ்சுத் துணிவின்றி ஐந்தவித்து அமர்ந்திருக்கும் உங்களுக்கு......,

''எமது மொழிக்குச் சம உரிமை தாருங்கள்'' 'எமது இனத்தை நசுக்காதீர்கள்' என்னும் தமிழ் மக்களின் உணர்ச்சிக் குரலுக்கு 'வகுப்புவாத' தேசத்துரோக மூலாம் பூசிடும், தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கையை, விடுதலை வேட்கையை நசுக்கிட எண்ணி பாதுகாப்புப் படைகளை காட்டுமிராண்டித்தனமாக ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கும் ஆட்சியினருக்குத் துதிபாடும் 'தமிழன்' எனப்படும் உங்களுக்கு......

தமிழ் மக்கள் சார்பில் மூன்று வேண்டுகோள்களைச் சமர்ப்பிக்கிறோம்.

(1) உங்களை ஈன்றெடுத்துத் தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்து ஆளாக்கிய உங்கள் தாய் ஒரு தன்மானம் மிக்க தமிழ்த் தாயாகிடின், 'தமிழ் மக்களும், சிங்கள மக்களைப் போன்று இந்நாட்டில் தன்மான மிக்கவர்களாக வாழ்ந்திடவேண்டும் என்னும் அவா உங்களுக்கு இருந்திடின், இனிமேலும் காலம் தாழ்த்தாது அரசமைப்பிற்குத் திருத்தம் கொணர்ந்து தமிழருக்கும் சிங்களவர் அனுபவிப்பதைப் போன்று சம உரிமைகளை வழங்கிட ஆவன செய்திடுங்கள்

(2) பஞ்சபாண்டவர்கள் சார்பில் துரியோதனனிடத்துச் தூது சென்ற கண்ணன் 'பாண்டவர்களுக்கு ஐந்து ஊரீ கொடு. அதுவும் இன்றேல் ஐந்து இல்லம் கொடு'' என்று கேட்டான். அது போன்று தமிழ் மக்களுக்கு உங்கள் அரசு சம உரிமைகளைக் கொடுத்திட மறுப்பின் தமிழ் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கையான ஆறு அம்சக் கோரிக்கைகளையாவது வழங்கிட அரசமைப்பிற்குத் திருத்தம் கொண்டு வாருங்கள்.

(3) இவையிரண்டினையும் உங்கள் எசமானர்கள் மறுப்பின் அவர்களை உதறித்தள்ளிவிட்டு எம் தணியில் சேர்ந்து தமிழரது உரிமைகளை மீட்டிடப் போராடிட முன் வாருங்கள். இந்த மூன்றில் ஒன்றினையாவது செயற்படுத்திட இயலாவிடின் தயவு செய்து அம்மையாருக்குப் பாதபூசை செய்து அவர் புகழ் பாடிக் கொண்டிருங்கள். ஆனால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டப் பாதையில் மாத்திரம் மறந்தும் குறுக்கிடாதீர்கள்.

துரோகிகளும் துரோகங்களும் என்றும் வென்றதுமில்லை; நின்று நிலைத்ததுமில்லை. எந்த இனமும் எப்போதும் அடிமையாய் வாழ்ந்ததுமில்லை.

— 'கடுகு'

## தமிழர் மீட்சிபெற...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யது. ஆனால் மேலே சொல்லப்பட்ட வழிகளுள் இது சிறந்தது.

தற்போதுள்ள அடிமைத் தனத்தினின்றும் விடுவிக்கிற காரணத்தினால் எனினும் எங்களுக்குத் தகுந்ததென தாம் நினைக்கும் வருங்கால அரசியல் திட்டத்தை வகுக்கும் வல்லமை அவர்களிடத்திலேயே உண்டு. ஆனால் அரசியல் அமைப்பு சட்டசபை சிறுபான்மையோருக்கு சுயேச்சையைக் கொடுத்துவிடுமென்று நினைத்தலாகாது.

எனவே சிங்களவரைப் பெரும்பான்மைச் சமூகத்தினராகக்கொண்ட சுதந்திர இலங்கையில் ஒரு அரசியல் அமைப்புச் சட்டசபை நமக்கு பாதுகாப்பு அளிக்குமென்பதை விளங்குவது கஷ்டமாகும்.

ஒரு தனி அரசியலில் (ஒற்றையாட்சியில்) அல்லது சமஷ்டி அரசியலின் கீழ் தமிழர் சிங்களவருடன் சேர்ந்து வாழவேண்டுமானால், எங்கள் நீதியான கோரிக்கைகளை வழங்குவதற்குரிய சிங்களவரது விருப்பமே, தமிழருக்குரிய பாதுகாப்பாகும்.

மற்றவழி, இப்போதுள்ள அரசியற் சட்டத்தை மேன்மை தங்கிய ராணியார் ரத்து செய்து, சிறுபான்மையோருக்கு பாதுகாப்பளிக்கும் இன்னொரு சட்டத்தை அமுலுக்கு கொண்டு வருவதாகும். சிங்களவராவது, பிரித்தானியராவது இது செய்யச் சம்மதிப்பாரா? இது சந்தேகத்துக்கு இடமானது.

ஆகவே தங்கள் வல்லமையைக் கொண்டு தமிழர் பிரிவதே மேலானதாகும்.'

## மலையக...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைக்கு ஆளாகின்ற விந்தையை எம்மால் பூரணமாக உணரமுடிகின்றது. இதன் காரணமாக நல்ல சேவை மனப்பான்மை உடைய ஆசிரியர்கள் கூட இந்த சூழ்நிலைக்கு உள்ளாகிவிடுகின்றனர்.

எனவே 'கொஸ்லந்தை இளைஞர்முன்னேற்றமன்ற'த்தின் தலைவர்: திரு. இரா. சு செல்வத்துரை கேட்டுக் கொள்வது என்னவென்றால் 'பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட ஆசிரியர்களே' மலையகத்தின் பின் தங்கியுள்ள குழந்தைகளின் எதிர்காலத்தினை பாழாக்குகின்ற இது மாதிரியான ஒரு சில தவறுகளைக் களைந்து, தமிழ் பேசும் மக்களுக்காக தமிழ் குழந்தைகளின் எதிர்காலத்தை சிறந்த முறையில் அமைக்க நல்ல சேவை மனப்பான்மையுடன் சேவை புரிய வேண்டுமென அனைத்துத் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களையும் அன்புடன் இதயம் திறந்து...... கேட்டுக் கொள்கிறோம்' என்பதே ஆகும்.

## தகுதிக்கும் திறமைக்குமே முதலிடம் தரப்படும்

—கௌரவ கல்வியமைச்சர்

திருமதி. சொர்ணம்பாள் நல்லையா கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் உதவி ஆசிரியையாக இருந்து அண்மையில் மூன்றாம்தர அதிபர் பதவி பெற்றவர்.

தராதரங்கள்:-

தமிழ் எஸ். எஸ். சி.
தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியர் 55-56
பி. ஏ. பட்டம். 1970 — சம்பளமில்லை,
பயிற்றப்பட்ட ஆசிரியராக அனுபவம் 17 ஆண்டுகள்.

திரு. ஆர். ஜோஸப்.

யா / புனித யாகப்பர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்தவர். உதவி ஆசிரியர் இரு நேர்முகத் தேர்வுகளுக்கும் அழைக்கப்பட்டும் பதவி உயர்வு கிடைக்கப் பெறாதவர்.

தராதரங்கள்

தமிழ் எஸ். எஸ். சி.
ஆங்கில "
இலண்டன் ஜி. சி. ஏ. (உயர்தரம்)
தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியர் 50—51
பி. ஏ. பட்டம் 1969—சம்பளமில்லை.
பயிற்றப்பட்ட ஆசிரியராக அனுபவம் 23 ஆண்டுகள்.

இங்கு எதற்கு முதலிடம் தரப்பட்டது?
நீதி வெல்லுமா?

—தகவல்:- ஹமீது சுல்தான்.

அடுத்த இதழில் தராதரமற்ற விஞ்ஞான உதவி ஆசிரிய நியமனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடும் சுவையும்

வகை வகையான வண்ண மலர்கள் மணம் பரப்பும் பொழில். பூங்காற்று வருடி இன்பம் வழங்கும் வேளை. புள்ளினம் இசை அளிக்கிறது. அதனினும் சுவைமிகு பாகு மொழி செவியில் விழுகிறது. பார்க்கிருன் இதற்கு முன் பார்த்தறியா வனப்புமிரு பாவையை! 'அமருக'! என்கிருள் அணங்கு, விழியால் விருந்திட்டு.

அஃது ஓர் பளிங்கு மண்டபம் அவன் ஓர் இளைஞன்—போர் வீரன்.

'தங்கள் வீரத்தை மெச்சாதார் இல்லை—இங்கு...'

'ஏறி எழும் படைகளைச் சின்ன பின்னமாக்கத்தக்க போர்த்திறன் உண்டு. எனினும், காலமறிந்து காரிய மாற்ற வேண்டும் என்று தாங்கள் நடந்து கொண்ட போக்கினைக் கண்டு வியந்து பாராட்டாதார் இல்லை.'

'எதற்கும் அஞ்சமாட்டார்—ஆனுல், என் மகனே! என்று உருக்கமுடன் பேசும் போது, நிலை குலையத்தான் செய்யும் என்று கூறினர், சிலர்! தங்கள் தரமும், திறமும் அறியாதார்! பகைவர் வீசிடும் வாளுக்கு எவ்விதம் அஞ்சாது இருப்பீரோ, அது போன்றே உமது தாயின் தளதளத்த குரல் கேட்டும், கண்ணீர் கண்டும் தளராது நின்றீரே, அதனை என்ன கூறிப்பாராட்டுவது!''

—மங்கை பேசுகிருள்—இளைஞன் இன்பத்தில் மிதக்கிருன்!

ஃ

வேலேருர் புறத்திலே, அவன் வாழ்ந்திட அமைந்த தோர் மாளிகையில் வேலைப் பாடு மிகுந்த இருக்கைகளை வரிசைப்படுத்துவதிலும், மற்றும் பல ஆடம்பரக் கோலங்களை அமைப்பதிலும் ஏடுபிடிகள் மும்முரமாக இருந்தனர்.

'பொன்னிழை மின்னிடும் அங்கி! வைரமணிகள் பதித்த வாளுறை!—அவனுக்கு!

'கருமுகில் நிறம் கொண்டதும் மின்னல் வேகத்தில் பாயத்தக்கதுமான புரவி—அவனுக்கு.'

பன்னீர் பெய்கிருர்கள் அவன் குளித்திட, செயற்கை ஓடையில்!

பழச்சாறு நிரம்பிய கோப்பைகளை ஏந்திச் செல்கிருர்கள், பக்குவமறிந்த பணிப் பெண்கள்—அவன் குற்றேவல் கேட்டு நடந்திடும் குமரிகள்!

பல ஆயிரம் வராகன்கள் பேழையில்! அவ்விதமான பேழைகள் பலப்பல!

அன்பரே! ஆருயிர் நண்பரே!—என்று அழைக்கிருர், இளவரசர்.

இவரில்லா விட்டால் உமக்கு ஏது இந்த வெற்றி? என்று கேட்டுக் கெக்கலி செய்கிருள் இளவரசி!!

'ஓவியர் இரவு பகலென்று பாராமல் வேலை செய்கிருர்—நமது நண்பரின் வடிவத்தைத்தீட்டி நமது கலைக் கூடத்தை அழகுபடுத்த,' என்கிருர் இளவரசர்.

'சிலை அல்லவோ சமைக்க வேண்டும் இவருக்கு! ஓவியம் போதாதே!! — என்கிருள் இளவரசி.

'இவருக்கு ஏற்ற எழிலோவியம் உண்டு, இங்கு, அறிவாயோ?' என்று கேட்கிருன் இளவரசன். மின்னலிடையாள்—'தெரியுமே முன்பே' என்று குறு நகையுடன் கூறுகிருள் இளவரசி.

'இவ்வளவு விரைவில், இத்துணை எளிதாக வெற்றி கிடைக்கும் என்று நான் எண்ணியதே இல்லை.

'கோட்டை வலுவுள்ளதல்லவோ!'

'படைக்கலன்கள் நிரம்ப, அவர்களிடம்!'

'முற்றுகை நீண்டு கொண்டே போகும் என்ற கலக்கம் எமக்கெல்லாம்......'

'நேரடித் தாக்குதலில், நாம் சிக்கிக்கொண்டிருந்தால், நிரம்ப அழிவு நேரிட்டிருக்கும்......'

'நல்ல வேளையாக எதிர் பாராத வகையிலே உதவி கிடைத்தது.'

'சாதாரண உதவியா!! கோட்டையைத் தாக்கித் தகர்த்திட வேண்டிய அவசியமே எழவில்லையே......'

'தட்டிஞேம்! திறக்கப்பட்டது!'

'கொட்டினேம் வெற்றி முரசு!'

—படையின் தளபதிகள் பேசி மகிழ்கிருர்கள் இது போல!

பன்னீர் தெளிக்கிருள் பாவை, இங்கிதமறிந்த முறையில்! அன்ஞேர் நாள், அடவி வழி நுழைந்து மாற்ருரைத் தாக்கப் புரவி மீது சென்ற போது, சேற்ருற்றிலே பாய்ந்ததால் சட்டை எல்லாம் சேறுமயமாகி விட்டது—அந்த நினைவு வந்தது வீரனுக்கு பல நாள் அந்தச் சேறுபட்ட சட்டையைப் பார்த்துப் பார்த்து அவன் பூரித்ததுண்டு — வெற்றி விருது என்று மகிழ்ந்ததுண்டு.

'அன்று சேறு! இன்று பன்னீர்!'

'அன்று மாற்ருரைத் தாக்கச் சென்றபோது, சேறு. இன்று?!

'ஒருபுறம் நச்சரவம்—மற்ருேர் புறம் அதனினும் கொடியவர்கள்!

வாட்போரில் வல்லவனும்-வாகை பல சூடியவனும்! வீரக்கழல் அணிந்தவனும்!! ஏடா நீ தானே அது? கொட்டிலில் புகுந்துள்ள நீயோ, கொற்றம் ஆண்டவன்! கொலுமண்டபத்திலே கோலமயிலாள் ஆட குயிலாள் பாட,' மிக்க கம்பீரமாக வீற்றிருப்பாயாமே?!



பேரறிஞர் அண்ணு

கேள்விப்பட்டதுண்டு! இன்று? உனக்கேற்ற இடம்! நாட்டியமாட நாகம்!!

'வெற்றி அல்லது வீரமரணம் என்று முழக்கமிடுவானும்...'

இப்போது என்ன கூறி முழக்கமிடுவான்! கூவு, சுடர்வாளை நம்பிக்கெட்டவனே! உரக்கக் கூவு!... வேழப்படையை முன்னே அனுப்பு—வேற்படையைப் பின்னேடு அனுப்பு! வெற்றி

எதிர்பார்த்தவனல்ல. வெஞ்சமரில் வீழ்ந்தானில்லை. வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்டான்!! வாட்டி வதைக்கிருர்கள்!!

பொன்னிறமேனி புழுதி படிந்திருக்கிறது. காலிலும் கரங்களிலும் தளைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. சிறைக்கூடக்காவலைமேற்கொண்ட சிற்றறிவுள்ள கொடியவர்கள், அவன் உண்ண வேகாத சோற்றினை மண்பாண்டத்திலிட்டு, நாற்றமடிக்கும் சேற்றுநீரை மண்குவளையில் ஊற்றி எதிரே வைக்கிருர்கள்.

ஒரு கணம் கண்களை மூடுகிருன். என்னென்ன எண்ணுகிருனே!! அரண்மனையில் அவன் நடத்திய விருந்துகளை எண்ணிக்கொள்கிருனே? இல்லை! இல்லை! கோட்டையைத் தாக்கித் தகர்த்திடவில்லை! தட்டினங்கள்! திறக்கப்பட்டது!! சமர் செய்து வீழ்த்திஞர்களில்லை, சதி செய்து சாய்த்தனர்!

புல்லில் மறைந்திருந்த பாம்புபோல், புல்லன் இருந்து காட்டிக்கொடித்துவிட்டான், கோட்டை பிடிபட்டது, கொற்றம் அழிந்தது—இதனைத்தான் எண்ணிக் கலக்கமடைகிருன்.

உடலிலே உள்ள வடு ஒவ்வொன்றும் ஒவ்வோர் வீரச் செயலுக்குச் சான்று! அதனை எண்ணிக்கொள்கிருன், கண்களிலே களிப்பொளி!!

'கட்டழகி பன்னீர்தெளித்திடும்போது, கலக்கம் அடை

காட்டிக்கொடுத்து அதன் மூலம் 'இலாபம்' அடைவோர் அதனுல் பெறுகின்ற மன உளைச்சலையும்—கொள்கைக்காகப்போராடி, அப்படிப் போராடும் போது மாற்ருர் கையில் சிக்குண்டு அதன் பயனுக சித்திரவதைப் படுவோர் அச்சித்திரவதையால் அடையும் மகிழ்ச்சியையும் இக்கதையில் தமக்கேயுரிய சுவையுடன் கூறியிருக்கிறர் பேரறிஞர் அண்ணு —ஈழத்தமிழினத்தான் ஒவ்வொருவனும் இச்சமயத்தில் படித்திடவேண்டிய கதை இது...!

'நமது மண்டலத்துக்கு 'மகத்தான சேவை' செய்த மணிமுடிக்கு மருதூர் மிட்டாவைப் பரிசாகத் தருகிருேம்' என்று மன்னர் அவையிலே அறிவித்ததைத் தொடர்ந்து வரவேற்பு விழாவிலே ஒரு பகுதிதான்—பன்னீர் தெளித்து, பாவை பளிங்கு மண்டபம் அழைத்துச் சென்று, பாடலாலும் ஆடலாலும் சுவையூட்டுவது.

காட்டாற்றுச் சேறு முன்பு கட்டழகி தெளித்திடும் பன்னீர் இப்போது!!

'பன்னீர் தெளித்திடும் போது அவனுக்குக் காட்டாற்றுச் சேறு நினைவிற்கு வருகிறது.'

களிப்பு உலர்கிறது —கண்களிலே நீர் துளிர்க்கிறது.

'காட்டாற்றுச் சேறு!—என்று அவன் முன்பு பலரிடம் காட்டிக் காட்டிக் களிப்படைந்தான்! கட்டழகி பன்னீர் தெளிக்கிருள் இப்போது — எவரேனும் கண்டு விடுவரோ என்று எண்ணிக் கலங்குவதுபோல இருக்கிறது அவன் பார்வை.

ஃ ஃ ஃ

இரக்கமற்றவர்கள் பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறவர்கள், வைக்கோற் புல் பரப்பப்பட்டிருந்த கட்டாந்தரையில —உடலெங்கும் புண் அவனுக்கு— உடைகந்தல்—கீழே வீழ்கிருன் — புல்லில் மறைந்திருந்த பாம்பு சீறுகிறது—பாய்ந்து [illegible] கிறது—கைகொட்டிச் சிரிக்கிருர்கள் கொடியவர்கள்.

முரசு எடுத்துச் செல்க!!—என்றெல்லாம் கூவு!!

கற்கோட்டையைத் துளைத்திட எவராலும் முடியாது என்று எண்ணிக் கொண்டான், ஏமாளி.

திறந்துவிட ஆள் இருக்கும் போது, எந்த முட்டாள் கோட்டையைத் துளைத்திட நேரத்தைச் செலவிடுவான்?

'தட்டினேம்! திறக்கப்பட்டது!!'

'வெட்டி வீழ்த்துவோம் என்று வீராப்புப் பேசிக் கொண்டிருந்தான்.'

'விழா நடத்துவோமா, வீழ்ந்தவனுக்கு... ஆமாம், நடத்தவேண்டும்... ஆடை எப்படி இருக்கவேண்டும்...!

'இவன் நம்பிக்கை நம்பிக் கிடந்த வேளப்படை சிதறி ஓடியபோது கீழே வீழ்ந்து விட்ட, முகபடாம் இவனுக்கு ஆடை....!

...ஒடியுந்தத நந்தங்களைத் தலையிலே வைத்துக்கட்டிட வாம்—முடி! மணிமகுடம்!!

குதிரைக்குப்போடுவாவே 'கொள்ளு' அது ஒருவேளை, யானைக்குப் போடுவானே 'தழை' அது ஒரு வேளை—இப்படி மாறி, மாறி, விழுந்து.

உடலெங்கும் வடு, உலராத நிலையில். உள்ளமோ உலைக்கூடம் போல. நாடாண்டவன், மாற்ருனிடம் பணியாதவன், போர்த் [illegible] இருந்து குழுபறிப்போர் இருக்கக்கூடும் என்று இனியும்

கிருன் ஒருவன், பளிங்கு மண்டபத்தில்!

காதகர் இடுமொழி வீசிடும்போது, உடலிலே உள்ள புகழ்க்குழி கண்டு பூரிக்கிருன் வஞ்சகத்தால் வளைக்கப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டுக் கிடக்கும் கொற்றவன்.

கொற்றவன், கொடுமை கண்டும் பெருமிதம் குன்ருது இருக்கக் காரணம், அவன் நெறி தவருததால்-வீரம் குன்ருததால்.

கோலமயிலாள் கடை இடை காட்டிப் பன்னீர் தெளித்தபோதும் களிப் படையாது பளிங்கு மண்டபத்துவீரன் கலக்கம்கொண்டிடக் காரணம், அவன் காட்டிக் கொடுத்த கயவன். அந்த நினைப்பு அவன் நெஞ்சினைச் சுட்டெரிக்கிறது —அதனுல்!

—திராவிட நாடு (27-5-62)

தொண்டைமானுற்றில்

## பொதுப்பணி

### மன்றம் தொடங்கியது

தொண்டைமானுற்று முன்னேற்றம் கருதியும், அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கத்துடனும் பெரியோர்களின் ஒத்துழைப்புடன் இளைஞர்களால் ஒரு பொதுப்பணி மன்றம்கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கண பதி படிப்பக மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி பொதுப்பணி மன்றத்தை அங்குரார்ப் பணம் செய்துவைத்த திரு. செ. குணநாதன் அவர்கள் தொண்டைமானுற்று முன் னேற்றம் கருதி இப்பொதுப் பணி மன்றத்தை உருவாக்குகிறேம் என்றும், இம்மன் றத்தின் சேவைகளை மென் மேலும் திறம்பட நடாத்த இவ்வூர்ப் பெரியோர்களும், இளைஞர்களும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்துப் பேசிய மா. அம்பிகைபாகர் அவர்கள் ஊரில் எவ்வளவோ பொதுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையாக இருப்பதாகவும், அவற்றை இம்மன்றம் பூர்த்திசெய்யும் என நம்புவதாகவும் கூறினர்.

மூன்ருவதாகப் பேசிய 1ம் வட்டார நகரசபை உறுப்பினர் திரு. இரா. சிவதாஸ் அவர்கள், எங்கள் கிராமத்திற்கு ஒரு பெண்கள் தையல் பாடசாலை அத்தியாவசியம் எனவும், குடிநீர் விநியோகத் திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் திருவாளர்கள் பொ. புவனேந்திரன், க. துரைராஜா, குமரகுரு, இராஜேந்திரம், முருகேசு, நற்குணம் ஆகியோரும் பொதுப்பணி மன்றத்தின் அவசியம் பற்றி வலியுறுத்தினர்.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: மா. அம்பிகைபாகர், உபதலைவர்: க. துரைராஜா, காரியதரிசி: போல் வீ. வீரசிங்கம், உபகாரியதரிசி: பொ. புவனேந்திரன், தனாதிகாரி: இரா. சிவதாஸ், உபதனாதிகாரி: செ. குணநாதன்,

சிரமதானக் குழுத்தலைவர்: இ. பிரேமரெத்தினம்.

நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

நற்குணம், குமரகுரு, இராஜேந்திரம், மகேந்திரம், முருகேசு, ஆனந்தவேல், துரைராஜா, ஜெயக்கொடி, மகாதேவ ஐயர்.

மேற்படி மன்றத்தின் முதல் நடவடிக்கையாக மறைந்த நீச்சல் வீரர் திரு. நவரத்தினசாமி அவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு பஸ் தரிப்பு நிலையம் ஒன்றும், சிலையொன்றும் நிறுவுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.


காலம் அறிதல்

'பகைவரைக் கண்டால் பொறுத்துச் செல்லவேண்டும் அப் பகைவர்க்கு முடிவு காலம் வந்தபோது அவருடைய தலை கீழே விழும்.'

திருவள்ளுவர்.

200 மில்க்வைற் நிலசோப் மேலுறைகளை அனுப்பி உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெப்பிட்டல்

ஒன்பதாவது வாரம்

சுடரும் சூறாவளியும்



குடும்பத்துடன் சிரித்து மகிழவேண்டிய புதுமைச் சித்திரம்

செல்லமகால்

கதை—வசனம்—டைரக்ஷன்

கோபு

காசேதான் கடவுளடா



2 வது வாரம்

முத்துராமன்
M. R. R. வாசு
தேங்காய் சீனிவாசன்
ஸ்ரீகாந்த்
மூர்த்தி
டைப்பிஸ்ட் கோபு
லட்சுமி
மனோரமா
ரமாபிரபா



3வது மாதம்!

சென்ட்ரல் (கொழும்பு) ராணி (யாழ்நகர்)



தமிழ் நாட்டில் 100 நாட்களுக்குமேல் ஓடியது

முத்துராமன், ஜி. வரலெட்சுமி,

பிரமிளா, ரங்கராவ், ராகவன், ஓ. ஏ. கே. தேவர்,

ரி. ஆர். ராமச்சந்திரன், ஆர். வரலெட்சுமி —நடித்த—

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

வாழையடி வாழை



6வது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) (கடைசி சில தினங்கள்)

ஜெய்சங்கர்,
லக்ஷ்மி, (இருவேடங்களில்)
முத்துராமன்,
சுந்தரராஜன்,
மனோரமா, பாலையா,
எம். ஆர். ஆர். வாசு,
பேபிராணி
மற்றும் பலர் நடித்த



ராணியார்குழந்தை



25 வது வெள்ளி விழா வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்நகர்)



சிவாஜிகணேசன், — வாணிஸ்ரீ

நடித்த

வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

வெள்ளி விழா கொண்டாடும் வெற்றிக காவியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டுக்காக ... அவர்களால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஜுலை மாதம் 15-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.